# கச்சியப்ப சிவாச்சாரியார் அருளிய கந்த புராணம் - பகுதி 10
# 5. யுத்த காண்டம் / படலம் 1- 5 (1 - 421)

# kantapurANam of kAcciyappa civAccAriyAr part 10 /canto 5 yutta kANTam (verses 1 - 421) In tamil script, Unicode/utf-8 format

---

## Acknowledgements:

Our Sincere thanks go to Dr. Thomas Malten & colleagues of the Univ. of Koeln, Germany for providing with a transliterated/romanized version of this work and for permissions to release the Tamil script version as part of Project Madurai collections.
Our thanks also go to Shaivam.org for the help in the proof-reading of this work in the Tamil Script format.

Preparation of HTML and PDF versions: Dr. K. Kalyanasundaram, Lausanne,

Switzerland.
© Project Madurai, 1998-2008.
Project Madurai is an open, voluntary, worldwide initiative devoted to preparation of electronic texts of tamil literary works and to distribute them free on the Internet.
Details of Project Madurai are available at the website
http://www.projectmadurai.org/
You are welcome to freely distribute this file, provided this header page is kept intact.

---

கச்சியப்ப சிவாச்சாரியார் அருளிய
கந்த புராணம் - பாகம் **10**

# **5.** தேவ காண்டம் / படலம் **1- 5 (1 - 421)**


| | |
|---|---|
| 1. திருப்பரங்குன்று சேர் படலம் | 1 - 35 |
| 2. தெய்வயானையம்மை திருமணப் படலம் | 36- 303 |
| 3. விண்குடியேற்று படலம் | 304 - 349 |
| 4. கந்த வெற்புறு படலம் | 350 - 355 |
| 5. இந்திரபுரிப் படலம் | 356 - 421 |


## **5.** தேவ காண்டம்

# 1. திருப்பரங்குன்று சேர் படலம்(1 - 35)

1 இன்ன பண்பினாற் சிவனடி
வழிபடல் இயற்றி
அந்நி லைக்கள நீங்கியே
அமரர்கண் முனிவர்
தன்ன தானையந்
தலைவர்கள் புடைதழீஇச்
சாரப்
பொன்னின் மஞ்ஞையின்
எருத்தமேல் கொண்டனன்
புனிதன். 1
2 சீர்தயங்கிய யூரமேல்
அமர்தருஞ் செவ்வேள்
சார்த லுற்றிடு மாலயன்
மகபதி தம்மை

நேர்த லில்படை வீரரை
நோக்கியே நீவிர்
ஊர்தி மேலராய் வம்மின்
நம்புடையென உரைத்தான். 2

3 வேறு
மற்றது காலையில் வண்டு
ழாய்முடிக்
கொற்றவன் முதலிய
குழுக்கொ டேவரும்
வெற்றிகொள் வீரமும்
வேறு தத்தமக்
குற்றிடும் ஊர்திமேல்
ஒருங்குற் றீண்டினார். 3

4 ஞாயிறு கறங்கென நணுகும்
பொன்முடிக்
கோயிலின் மருங்கினில்

குழீஇக் குழீஇயிரண்
டாயிர வெள₡ளமாம்
அடல்வெம் பூதரும்
ஏயென எழுந்தனர் எழுந்த 4
பூழியே.

5 மிக்குயர் அறிஞரை மேவில்
கீழ்மைசெய்
மக்களு மேல்நெறி
அடைதல் வாய்மையே
தக்கதொல் பூதர்கள் சரணந்
தோய்தலில்
புக்கது பொன்நகர் புவியும்
பூழியாய். 5

6 அழற்றிய பல்கதிர் ஆத
பத்திரம்
நிழற்றிய விண்ணளாய்
நிமி£₡த்த கேதனங்

குழற்றிய துளைவயிர்
கோடு காகளம
மிழற்றிய கேரிகை மிகவும்
ஆர்த்தவே. 6

7 மேக்குயர் வட்டமும்
விளங்கு காம்புமாய்
நீக்கமில் கவிகைகள் நிழற்றி
மல்குவ
மாக்கிளர் ப·றொடை
வானக் கம்பலந்
தூக்கிய திறனெனத்
தோன்று கின்றவே. 7

8 மேற்றலை கடவிய
வெய்யன் வெம்மையால்
நோற்றலை எய்திவான்
உணங்க நோன்றிரை
ஆற்றலை முயன்றென

அனிக வேலையுட்
கோற்றலை அசைவவெண்
கொடியின் கானமே. 8

9 பாங்கமை பதலையே முதல
பல்லியம்
ஆங்கொலி வழங்குவ
அவுணத் தீயரைத்
தாங்கினை யென்றிறை
தண்டஞ் செய்திட
வாங்கிய திரைக்கடல்
வாய்விட் டொக்குமால். 9

10 காந்தளஞ் சென்னியன்
கடவு மாமயில்
கூந்தொறுங் கூந்தொறுங்
குலைந்து ப·றலைப்
பாந்தளங் கசைதலும்

பசலை மூக்கினால்
ஆய்ந்திடு கின்றன அகிலங் 10
குத்தியே.
11 மூக்குடை அலகினால்
முகிலைக் கீறியே
ஊக்கொடு பரலென
உருமுப் பற்றுமால்
தீக்கிளர் வன்னதோர் செய்ய
சூட்டுடைக்
கூக்குரல் வாரணங் கொடிய
தாகையால். 11
12 இந்நிகழ் வுற்றிட எழுந்த
தானைகள்
முன்னயல் கடைக்குழை
மொய்த்துச் சென்றிடப்
பன்னிரு மொய்ம்புடைப்
பகவர் மேலவன்

அந்நக ரத்தினும் அகன்று
போயினான். 12

13 பொரியரை விளவுகால்
புனிற்றுத் தீங்கனி
வருபயன் கொண்டுதாம்
வறிது வீழ்த்தெனக்
கரியினம் பாரிடக் கணங்கள்
ஆர்ப்பினால்
வெருவின உணர்வில
மயங்கி வீழ்ந்தவே. 13

14 சாற்றிடில் தம்வினை
தம்மைச் சூழுமால்
ஆற்றலில் பெற்றம
தலைக்கும் வல்லியம்
மாற்றருந் துப்புடை வயவர்
தானையுள்
ஏற்றுரி முரசினுக் கிடைந்த

ழிந்தவே. 14

15 குஞ்சரம் எறிந்திடுங்
கொலைவல் கோளரி
எஞ்சலில் கயமுகா¢
எண்ணில் பூதர்கள்
விஞ்சிய பிளிற்றொலி
வினவி மெய்பனித்
தஞ்சின நஞ்செழ அயர்ந்த
தேவர்போல். 15

16 உரங்குறை போழ்தில்யார்
ஒடுங்கல் இல்லவர்
வரங்குறை மான்முக
வயவர் ஓதையால்
கரங்குறை வின்றிநீள்
கடுங்கண் யாளிபோய்க்
குரங்குறை சூழலுட்
குலைந்து புக்கவே. 16

17 வசைபடு பாரிடம் வழுக்க
லில்வகை
மிசைபடும் ஊற்றமாய்
மேற்கொண் டுற்றன
இசைபடு பாரிடம் இடிக்குங்
கொட்பினால்
அசைபடு கின்றன அடுக்க
லானவே. 17

18 உரகமும் மடங்கலும்
ஒடுங்கி உட்கியே
வரைகளின் முழைபுக
வானத் தார்ப்பன
அரிமுக வீரர்தம் அரவத்
தன்மையால்
இரிவன புரள்வன எழிலி
யேறெலாம். 18

19 காட்டக எயினர்தங்

கல்லென் சும்மையால்
கூட்டுறை புட்குலங்
குலைவுற் றாலெனச்
சூட்டுடை வாரணந் தோகை
ஆர்ப்பது
கேட்டுளம் நடுங்கினர்
கிலேசங் கொண்டுளார். 19

20 அரங்கு மதலைமேல் ஆடு
நீரரின்
மரங்களை அலைத்திடு
கடுவன் மந்திகள்
கரங்குலை வோடுபற்
காட்டி வாய்வெரீஇ
இரங்கின சேவலங் கொடியி
டிப்பினால். 20

21 ஆரண முழங்கொலி அமரர்

வாழ்த்தொலி
சீரண இயவொலி சேனைப்
பேரொலி
காரணம் இல்லவன் கடவு
மாமயில்
வாரண வொலிகளான்
மறைத லுற்றவே. 21

22 இடனுறு குறிஞ்சியில்
இனைய தன்மையால்
நடவைகொள் பெரும்படை
நடுவண் ஏகியே
சுடர்பொழி வேலினான்
தூய கூடலின்
குடதிசை யமர்பரங் குன்றை
எய்தினான். 22

23 ஆவதோர் பொழுதினில்

அங்கண் முன்னுறை
மூவிரு தவத்தரும் முளா¤
யான்முதல்
கூவரும் எந்தையை
இறைஞ்சி இவ்விடை
மேவுதி சிறந்ததிவ்
வெற்பென் றோதினார். 23

24 என்றலும் முருகவேள்
யாமும் இவ்வரைச்
சென்றிட நினைந்தனம்
அதனைச் செப்பினீர்
நன்றும தெண்ணமும் நமது
சிந்தையும்
ஒன்றிய வேயென
உவப்பிற் கூறினான். 24

25 மைம்மலை துழனியும்
வடிவும் பெற்றுடைக்

கைம்மலை பொழிதரு
கடாங்கொள் சாரலின்
அம்மல யேறினன் அமலை
தன்னொரு
செம்மலை யாகிவந் துதித்த
சிற்பரன். 25

26 வற்றருந் திரைக்கடல்
வடாது மாதிரப்
பொற்றையை நுகர்ந்தெனப்
பூத சேனைகள்
கொற்றவன் வருபரங்
குன்றின் சாரலைச்
சுற்றிய மிசையினுந்
துவன்றிப் புக்கவே.
26

27 காலையங் கதுதனிற்
கடவுட் கம்மியன்

மாலுறு கிரிதனில் வரம்பில்
வீதியுங்
கோலநற் றெய்வதக்
குலமுங் கோயிலுஞ்
சோலையும் வாவியுந்
துவன்ற நல்கினான். 27
28 அத்துணை எம்பிரான்
அமரர் கம்மியன்
கைத்தொழில் நோக்கியே
கருணை செய்துபோய்ச்
சித்திர மறுகிடைச் சேனை
வீரரை
வைத்தனன் மந்திர
வரைப்பை எய்தினான். 28
29 ஏயின மஞ்ஞைநின் றிழந்து
நான்முகன்
மாயவன் மகபதி வயவர்

மற்றையோர்
ஆயினர் புடைவர அவையி
னூடுபோய்ச்
சீயமெல் லணைமிசைச்
சிறப்பின் வைகினான். 29

30 பரீஇயயல் வந்திடு பங்க
யன்முதல்
மரீஇயினர் தமையெலாம்
வயின்வ யின்றொறும்
ஒரீயினன் அமரரை ஒல்லை
யேவினான்
பொரீஇயினர் இல்லதோர்
புனித மேலையோன். 30

31 குலக்கி£¤ பொருவிய
குறளின் வேந்தரும்
வெலற்கருந் திறலுடை வீர
மொய்ம்பனும்

இலக்கரும் எண்மரும்
யாரும் எந்தைதன்
மலர்க்கழல் தொழுதனர்
மருங்கின் ஈண்டினார். 31

32 ஏவலின் இயன்றனர்
இனையார் நின்றிட
மூவிரு பராசர முனிசி
றார்களுஞ
சேவலை யுயரிய தேவ
நாயகன்
பூவடி அருச்சனை புரிந்து
போற்றினார். 32

33 வழிபடு புதல்வர்கள்
வழுத்தி நின்றுழ
உழுவலன் போடுகண்
ணோடிச் செஞ்சடைக்

குழவிவெண் பிறையினான்
கூறுந் தொல்லருள்
முழுவதும் நினைந்தனன் 33
முற்று ணர்ந்துளான்.

34 சலம்புரி யும்பரா சரனெ
னும்முனி
குலம்புரி தவமெனுங்
குமரர் தேர்வுறப்
புலம்புரி போதகப்
பொருண்மை யாவையும்
நலம்புரி குமரவேள்
நவின்று வைகினான். 34

5 பொருவரு மகேந்தர
புரத்தை நீங்கியே
தரணியில் வந்தவா சாற்றி
னாம்இனிப்
பெருமைகொள் இந்திரன்

பெண்ணை எம்பிரான்
திருமணஞ் செய்திடுஞ்
செய்கை செப்புவாம். 35

ஆகத் திருவிருத்தம் - 35

----------

## **2.** தெய்வயானையம்மை திருமணப் படலம் **(36 - 303 )**

36 காய்ந்திடு தம்பகை
கடந்து பொன்னகர்
வேந்தியல் முறையருள்
வேற்கை வீரற்குக்
கூந்தலஞ் சிறுபுறக் குஞ்ச
ரத்தனை
ஈந்திட மகபதி இதயத்
தெண்ணினான். 1

37 விருத்த மதாகும்இவ்
விழைவை இந்திரன்
திருத்தகு மாலயன்
தேவர் தேர்வுற
உரைத்தனன் வினவலும்
உவகை பெற்றுநின்
கருத்துநன் றாலெனக் 2
கழறல் மேயினார்.

38 பன்னிரு மொய்ம்புடைப்
பகவன் பாற்படப்
பின்னலஞ் கரிமுழற்
பிடியும் மொய்கைவாய்
முன்னுற அருந்தவம்
முயன்று வைத்தனன்
இன்னுழி அதன்பயன்
எய்திற் றேகொலாம். 3

39 கயலுறழ் விழியுடைக்

கடவுள் யானையை
வியல்வரை எறிந்திடு
வேற்கை அண்ணலுக்
கியல்புளி வதுவையால்
ஈதற் கிவ்விடை
முயலுதி கடிதென
மொழிந்து வைகினான். 4

40 மற்றது போழ்தினின்
மகத்தின் செம்மலோர்
ஒற்றனை நோக்கியே
ஒல்லை மேருவாம்
பொற்றையின்
மனைவியைப் புதல்வி
தன்னுடன்
இற்றையில் விளித்தனை
ஏகுநீ என்றான். 5

41 என்றலுந் தூதுவன்

இசைந்து மேருவிற்
சென்றனன் புலோமசைத்
தெரிவை முன்புபோய்
நின்றனன் வணங்கினன்
நினது சிந்தைபோல்
ஒன்றிய கேளென
உரைத்தல் மேயினான். 6

42 மாண்டனன் வெய்யசூ£
மதலை தன்னொடு
சேண்டொடர் அமரருஞ்
சிறையின் நீங்கினார்
ஆண்டலை உயர்த்தவன்
அனிகந் தன்னொடு
மீண்டனன் திருப்பரங்
குன்ற மேயினான். 7

43 நின்றிட அனையது
நினது நாயகன்

உன்றனை மகளொடும்
ஒல்லை யிற்பரங்
குன்றிடை இருக்கையிற்
கொண்டு செல்கெனா
இன்றெனை விடுத்தனன்
ஏகுநீ யென்றான். 8

44 அம்மொழி வினவலும்
அணங்கின் நல்லவள்
விம்மித முற்றனள்
விழுமம் நீங்கினாள்
எம்மையும் இல்லதோர்
இன்பம் எய்தினாள்
கொம்மென எழுந்தனன்
குமரி தன்னொடும். 9

45 புடையுற வணங்கினர்
போற்றி மேருவின்
இடையுறு புலோமரை

ஏம மாகியே
அடலயி ராவத் வானை
மேற்கொடு
மடமகள் தன்னொடும்
வானத் தேகினாள். 10

46 பொருப்பினுள்
மேலதாய்ப் புவியிற்
பேர்பெறுந்
திருப்பரங் குன்றிடைச்
சென்று தேவர்கோன்
இருப்பதோர் மந்திரத்
தெய்தி வைகினாள்
மருப்பிரண்
டுடையதோர் வார
ணத்துடன். 11

47 உரையுமவ்

வெல்லையின் உயர்ம
கேந்திரச்
சிறையினும் அகன்றிடு
தெய்வத் தையலார்
இறைவியைப் பெற்றன
மியாமுய்க் தோமெனா
முறைமுறை
வணங்கினா£ முகிழ்த்த 12
கையினார்.

48 சேணுறும் எழிலிவாய்
திறந்த மின்னுவைக்
காணுறு கின்றதோர்
கலாப மஞ்ஞைபோல்
மாணுறு புலோமசை
வரலும் மாதரார்
ஏணுறு கின்றனர் ஏமம்
பெற்றனர். > 13

49 கண்டனள் மதலையைக்
கருணை யால்தழீஇக்
கொண்டனன்
மகிழ்ந்தனள் கொங்கை
பாலுக
விண்டனள் கவற்சியை
வெறுமை யுற்றுளோர்
பண்டுள பெருநிதி
படைத்த பான்மைபோல். 14

50 ஆடுறு பசியினோர்
ஆக்கங் கண்டுழி
நீடுறும் உவகையான்
நிறை பெற்றென
மாடுறு புலாமசை
வடிவங் காண்டலு
கூடினர் தன்மையுங்

குரிசில் எய்தினான்.

51 வேறு

அப்போது வானோர்
குழுவோ டயிராணி
கேள்வன்
செப்*போது கொங்கை
மகமூஉ மணஞ்செப்பல்
முன்னி
ஒப்போதும் நீர்மை
யிலதாம் ஒருவன்
கழற்கே
கைப்போது தூவிப்
பணிந்தேத்திக் கழறல்
உற்றான். br> ( * ஓது -
உவமவுருபு.) 16

52 கன்னின்ற மொய்ம்பின்
அவுணக்களை கட்டல்

செய்தாய்
இந்நின்ற தேவர்
சிறைமீட்டனை என்ற
னக்கு
இன்னின்ற தொல்சீர்
புரிந்தாயது முற்றும்
நாடிச்
செய்ந்நன்றி யாகச்
சிறியேன்செயத் தக்க 17
துண்டோ.
53 முந்தேதமி யேன்பெறு
மங்கையிம் மொய்வ
ரைக்கண்
வந்தே யமர்வாள்
அவள்தன்னை வதுவை
செய்து
கந்தே புரைநின்

பெருந்தோளிற் கலத்தி
யாங்கள்
உய்ந்தே பிறவிப்
பயன்பெற்றனம் ஓங்க
வென்றான். 18

54 என்னுந் துணையில்
அமரேசனை எந்தை
நோக்கி
அந்நங்க் தானும்
மிகநோற்றனள் ஆத
லால்நீ
முன்னும் படியே
மணநாளை முடித்தும்
என்னத்
தன்னுங் கடந்த
மகிழ்வெய்தித் தருக்கி
நின்றான்.

19

55 வடிக்கொண்ட
ஒள¢வேற்
படைநம்பிதன் வார்க
ழற்கால்
முடிக்கொண் டடியேஞ்
சிறந்தேங்கள் முதல்வ
என்னாக்
கடிக்கொண்டே வாய்தற்
புடைவந்து கணிப்பில்
காதம்
நொடிக்கொண்ட
போழ்திற் படர்தூதரை
நோக்கி னானால். 20

56 முன்னாகி யுள்ள
பலதூதர் முகத்தை
நோக்க

அன்னார் எவரும்
தொழுதேபொன் னடிவ
ணங்கி
எந்நாயக னேதமி
யேஞ்செய்வ தென்கொ
லென்னப்
பொன்னா டுடையான்
இ·தொன்று புகல 21
லுற்றான்.
57 மூவர்க்குள் மேலோன்
கிரிசேர் முசுகுந் தனாதக்
காவற் கடவுள்
தலைவர்க்கும் ககன
மேவும்
தேவர்க்கும் ஏனைத்
திசையோர்க்கும் முனிவ
ராயோர்

ஏவர்க்கும் எந்தை
மணநாளை எனச்சொல் 22
வீரால்.

58 கந்தக் கடவுள்
மணத்தன்மை கழறி
வல்லே
இந்தப் பொருப்பி
னிடையாவரும் ஈண்டும்
வண்ணம்
தந்திட் டிடுங்கள்
எனவாசவன் சாற்ற
லோடும்
அந்தக் கணத்தில்
தொழுதொற்றர் அகன்று
போனார்.

23

59 வேறு

போனபொழு திற்புலவர்
செம்மல் புலன்மிக்க
வானவர்கள் கம்மியனை
வல்லையில் விளித்துக்
கானமர் கடம்புபுனை
காளைதன் மணத்துக்
கானசெயல் முற்றுற
அமைத்தியிவண் 24
என்றான்.
60 புலவன துளங்கொடு
பொருப்பின் ஒருசாரின்
நிலமிசை வரைப்பகல்
நிதிக்கொடு விதித்துக்
குலமணி குயிற்றிநனி
கோலம தியற்றி
வலனுயர் சிறப்பினொரு
மண்டபம் அமைத்தான். 25

61 மேலைநில முற்றுற
விதானவகை போக்கி
மாலையொடு பல்கவரி
வான்றுகில்கள் தூக்கி
ஆலய நனந்தலையில்
ஆறுமுகன் வைக
நூலின்முறை நாடியொரு 26
நோன்தவி சமைத்தான்.

62 வேதநெறி தந்திடு
விசாகன் அயல்வந்த
மாதவன் விரிஞ்சன்முதல்
வானவர்கள் யாரும்
ஏதிலரும் வைகஇயல்
கின்ற இடைதோறும்
ஆதனம் வரம்பில
அமைத்தனன்
இமைப்பில். > 27

63 மன்றல்பயில் கின்றவது
வைக்களன் மருங்கில்
குன்றுபுரை பல்சிகர
கோபுரம் வகுத்தான்
அன்றிமணி மண்டபம்
அளப்பில் அமைத்தான்
இன்றியமை
யாப்பொதுவும்
எண்ணில இழைத்தான். 28

64 காலம்வரை யாதுகரு
துற்ற பொழுதெல்லாம்
சாலவெவர் கண்ணுநனி
தம்பயன் வழங்குஞ்
சோலைமலர் வாவிகள்
சுனைத்தொகை
தொகுத்தான்
ஏலும்வது வைக்குரிய

ஏனவும் அளித்தான். 29

65 அவ்வகை
யெலாம்புலவன்
அங்ஙனம் வகுப்பச்
செவ்விது தெரிந்துவகை
செய்தமரர் செம்மல்
மெய்வதுவை யாற்றும்
வழவேண்டு கரணங்கள்
எவ்வெவையும்
அங்கணோர் இமைப்பில்
வருவித்தான். 30

66 தேவர்முதல் வன்தனது
செய்கை இதுநிற்க
ஏவலர் இசைத்திடலும்
இவ்வதுவை காணக்
கோவியல் புரிந்தமுசு

குந்தனெனும் நேமிக் 31
காவலன் வரும்பரிசு
கட்டுரைசெய் கிற்பாம்.
67 கல்லருவி தூங்கு
கயிலைப்பொழி
லின்மேனாள்
அல்லுறழ் மிடற்றவனும்
அம்பிகையு மாக
னுல்லையின்
மகிழ்ச்சியொ டிருப்பமுசு
ஈட்டம்
வில்லுவ மரந்தொறும்
வியன்சினையில் உற்ற. 32
68 முற்றுணர் கருத்தின்முனி
வோர்கள்என முள்காந்
துற்றிடு முசுக்கலையுள்
ஒன்றிருவர் மீது

மற்றொரு வில்வத்திலை
வரம்பில பறித்துத்
துற்றிடுவ தென்னநனி
தூர்த்துளதை யன்றே. 33
69 தூர்த்ததொரு
காலைதனிற் சுந்தரிபொ
ருளாய்ச்
சீர்த்திடலும் ஆங்கவள்
செயற்கைதனை
அண்ணல்
பார்த்துநமை ஈண்டுவழி
பட்டுளது தன்னை
வேர்த்திடுவ தென்னிது
விடுத்தியினி என்றான். 34
70 என்றிடலும் அம்பிகை
இகற்சின மிலாளாய்
நன்றருள் புரிந்திடலும்

ஞானவடி வானோன்
வன்றிறல் முசுக்கலை
மனத்திருள் அகற்றி
ஒன்றியமர் வாலுணர்
வொருங்குதவி னானால். 35
71 மெய்யுணர்வு சேர்தலும்
வியன்சினை
யின்நின்றும்
ஒய்யென இழிந்துமுசு
உட்குவர லெய்தி
ஐயனையும்
ஆய்தனையும்
ஆர்வமொடு தாழ்ந்து
பொய்யடிய னேன்பிழை
பொறுத்திர்என லோடும். 36
72 பிழையிதென
அச்சமொடு பேசல்எமை

ஈண்டே
விழுமியதொர்
கூவிளையின்
மெல்லிலைகள் இட்டு
வழிபடல் புரிந்தனை
மனுக்குலம் உதித்து
முழுதுலகை யாளுகென
முன்னவன்
37
மொழிந்தான்.

73 வேறு
அம்மொழி தேர்தலும்
ஆயதொர் கள்வன்
கைம்மிக லுற்ற
கலங்களுர் எய்தி
விம்மி இரங்கி
விதிர்ப்பொ டெழுந்தே
எம்மிறை வற்றொழு

திவ்விவை செப்பும். 38

74 நுங்களை வைகலும்
நோக்கி உவப்பாய்
இங்குறை கின்ற திகந்து
நிலம்போய்
மங்குறு செல்வ
வலைப்படு வேனேல்
எங்கள் பிரான்பினை
எங்ஙனம் உய்கேன்.

39

75 என்னலும் அன்னதை
எம்மிறை கேளா
நின்னுளம் நன்று
நிலத்திடை வைகிப்
பின்னிவண் மீள்குதி
பேதுறல் எய்தி
முன்னலை யாதும்

முசுக்கலை என்றான். > 40
76 பொய்ம்மறை யான
புலாலுடல் போற்றி
அம்மையில் வாழ்விடை
அற்ற முறாமே
இம்முக னோடுற
எற்கருள் என்னா
மெய்ம்முசு வின்கலை
வேண்டிய தன்றே. 41
77 அற்றமில் அவ்வரம்
ஐயன் அளிக்கப்
பெற்றருள் கொண்டு
பெருங்கயி லாயப்
பொற்றை யகன்று
பொருக்கென இம்பர்
மற்றொரு கணத்தினில்
வந்தது மன்னோ.

42

78 ஆரஞர் மூழ்கியும்
ஆக்கம் இழந்தும்
வாரிசு சுருங்கியும்
வாய்மை நிறுத்தித்
தாரணி யாள்அரிச்
சந்திரன் என்போன்
ஓர்மரு மான்என
வேயுதித் தன்றே. 43

79 மாமுக மேமுசு மற்றுள
வெல்லாங்
காமரில் ஏர் தரு காட்சிய
தாகிக்
கோமுறை சேர்முசு
குந்தன் எனாவோர்
நாம இயற்பெயர்
நண்ணிய தன்றே. 44

80 ஆய வழிப்படும்
அம்முசு குந்தன்
தூய பொலன்முடி
தொன்முறை சூடி
மாயிரு ஞால வளாகம
துள்ள
தேய மெலாமொர்
*செகிற்கொடு காத்தான்.
( * செகில் -
தோள்மேல்.) 45
81 ஓவறு சீர்க்கரு வூரிடை
மேவிக்
கோவியல் ஓம்புறு
கொள்கை யனாகித்
தேவரை ஏவல்கொள்
சீர்கெழு சூரன்
காவலின் ஆணை

கடக்கலன் உற்றான். 46

82 சொற்றிறல் மேதகு
சூரெனும் வெய்யோன்
உற்றிடும் வைப்பினில்
ஓரிடை தன்னில்
மற்றொர் இளம்பிறை
வைகிய வாபோல்
கொற்றவ னாம்முசு 47
குந்தன் இருந்தான்.

83 சூரனை எந்தை
தொலைத்தது கேளா
ஆரஞர் நீங்கி
அருஞ்சிறை பெற்ற
மேருவ தென்ன
வியன்மிடல் பெற்றுச்
சீரிறை மாட்சி செலுத்தி
அமர்ந்தான். 48

84 வேறு
அமரும் எல்லையின்
அரசன் முன்னரே
இமைய வர்க்கிறை ஏவு
தூதர்போய்க்
கமல மன்னபொற்
கழல்கள் வாழ்த்தியே
தமது வன்மையாற்
சாற்றல் மேயினார். 49

85 உனது நண்பனான் உறுபு
ரந்தரன்
தனது தூதர்யாம் தாவில்
சீர்பெறீஇ
நினது சுற்றமும் நீயும்
வாழிகேள்
இனிது மங்கலம்
இசைப்ப எய்தினேம். 50

86 அடாத தீமைசெய் தமரர்
தஞ்சிறை
விடாத சூரனை வீட்டி
வேலவன்
வடாது பூமி£ய் வந்து
கூடலின்
குடாது சேர்பரங் குன்றில்
வைகினான்.
51

87 கொற்ற வேற்படைக்
குமரற் கிந்திரன்
தெற்றெ னத்தருந் தெய்வ
யானையை
இற்றை சென்றபின்
ஈகின் றானிது
சொற்றி டும்படி தூண்டி
னானெமை. 52

88 மாறி லாதஅவ் வதுவை
காணநீ
ஈறில் சேனையோ
டெழுந்து தென்றமிழ்க்
கூறு சீர்ப்பரங் குன்றந்
தன்னிடைச்
சேறி யாலெனாச் சிலதர் 53
ஓதினார்.

89 ஓத அன்னவன் உவகை
சிந்தையின்
மீது பொங்குற மெய்ப
னித்தெழீஇத்
தூத ரைத்தழீஇச் சோப
னம்மிதற்
கேது மல்லையால் ஈவு
மாறென்றான். 54

90 ஈண்டை மாநிதி யாவும்

நல்குகோ
காண்ட குங்குடை கவரி
நல்குகோ
ஆண்டி ருந்தஎன் அரசு
நல்குகோ
வேண்டு கின்றதென்
விளம்பு வீர்என்றான். 55

91 கோதில் சீர்முசு குந்தன்
இந்தவா
றோதும் எல்லையில்
உவகை யுற்றவன்
ஆத ரத்தின தளவை
நோக்கியே
தூத ராயினோர் வியந்து
சொல்லுவார். 56

92 சொல்வி னைப்படுந்
தூதர்க் கிவ்வெலாம்

ஒல்வ தன்றிவை உதவிற்
றொக்குமால்
வல்வி ரைந்துநீ வாச
வன்முனஞ்
செல்வ தேயெனச்
செப்பிப் போயினார். 57

93 போய தூதுவர் புவியின்
மன்னவர்
ஆயி னோர்க்கெலாம்
ஆறு மாமுகச்
சேய வன்மணஞ் செப்பி
மாதிரம்
ஏயி னோர்க்கும்இங்
கிதுவி ளம்பினார். 58

94 அகல்வி சும்பிடை அல்க
லும்படர்

பகல வன்முதற் பகவர்
யாவர்க்கும்
இகலின் மாதவர்
எவர்க்கும் இச்செயல்
விகல மின்றியே 59
விளம்பி யேகினா£.

95 வேறு

ஆய காலையின்
முசுகுந்தன் அப்பதி
தன்னில்
மேயி னார்களுந்
தன்பெருஞ் சேனையும்
வேற்கை
நாய கன்மணங் காணிய
முன்னரே நடப்பான்
பாய்ம தக்கரி மிசைமுர
சறைந்திடப் பணித்தான்.

60

96 அந்த நீர்மையை
வள்ளுவன் அகன்கரு
வூரில்
தந்தி யின்மிசை ஏறியே
தனிமுர சறைந்து
முந்து சீர்க் கமலாலயத்
தரன்விழா மொழிந்தே
இந்தி ரன்திரிந்
திடுதல்போல் திரிந்தனன்
இசைத்தான்.
61

97 வேறு
ஆனதோர் பொழுதில்
அந்நகரின் மாக்களுஞ்
சேனையின்
வெள¢ளமுந் திசைக

ளின்புறம்
போனதோர் பெரும்புறப்
புணரிக் கேகுறும்
ஏனைய கடலென எழுத 62
லுற்றவே.

98 எண்டிசை யாறறுவ
இபங்கள் ஆதலின்
அண்டமுந் தாங்குவான
அயன்ப டைத்தென
விண்டொட நின்றிடும்
வேழம் எண்ணில
கொண்டல்கள் சூழபோற்
குலவச் சென்றவே. 63

99 வால்கிளர் கற்றையும்
மதர்வை நோக்கமும்
பால்கிளர் செவிகளும்
பழிப்பில் சென்னியுங்

கால்கிளர் செலவுமாய்க்
கால்கள் சென்றென
மேல்கிளர் புரவியின்
வெள¢ளஞ் சென்றவே. 64

100 ஐயிரு திசையினும்
அணிந்து செல்வன
கொய்யுளை வயப்பரிக்
குழாங்கள் பூண்டன
வெய்யவர் உதித்தென
விளங்கு காட்சிய
வையமெண் ணில்லன
வையம் போந்தவே.
65

101 வலிபுணர் யாக்கையர்
வயங்கொள் வாகையர்
கொலைகெழு பல்படைக்
கூட்டுண் வாட்கையா¢

புலியுறழ் மானவப்
பொருந ராயினார்
தலைவர்கள் தம்மொடு 66
தழுவிப் போயினார்.

102 அடல்வலி மானவர்
அங்கை ஏந்திய
படைவகை மின்னுவ
பல்லி யங்களும்
இடியொலி காட்டுவ
ஈண்டு தானையுட்
கொடிநிரை
விசும்புதோய் கொண்டல்
ஆயவே. 67

103 தாளுறு கழலினர்
சரம்பெய் தூணியர்
தோளுறு வில்லினர்
தொடையற் குஞ்சியர்

வாளுறு தடங்கணார்
மருங்கு மன்மத
வேளென ஒருசில வீரர்
ஏகினார். 68

104 கறுத்திடுபல கைவாட்
கையர் சாலிகை
பொறுத்திடு மெய்யின
ராகிப் போகுவார்
மறுத்தவிர் மதிமுக மாதர்
நாட்டவேல்
ஒறுத்திடு நம்மையென்
றுன்னி னா£கோலோ. 69

105 அடைந்திடு துன்பெலாம்
ஆற்றி யம்புவி
மடந்தைமுன் செய்திடு
மாத வத்தினால்
தொடர்ந்திடு பிடியினந்

தொலையப் பூமிசை
நடந்தனர் வரம்பிலா
நகைமென் கொம்பனார். 70

106 ஏரகல் மணந்தனக்
கெய்தும் ஆசையால்
வாரக முலையுடை
மடந்தை மார்பலர்
பாரக மலிதரப் பரவிப்
போயினார்
தாரகை விண்ணெறி
படருந் தன்மைபோல். 71

107 இடையிடை கால்களும்
யாறுஞ் சேர்தலின்
படிமிசை நடந்திடு
பாவை மார்களை
விடலைகள் ஏந்தியே
மெல்ல ஏகினார்

கடலினும் பெரியதாங்
காம மூழ்குவார். 72
108 தந்தி களின்மிசைத் தைய
லாருடன்
மைந்தர்க ளேகினார்
மாநி லந்தனில்
அந்தமில் சீரயி ராணி
தன்னொடும்
இந்திரா¢ போவதோர்
இயற்கை போலவே. 73
109 அதிர்குரல் தோ¢களில்
அரிவை மாருடன்
கதுமெனப் போயினர்
கணிப்பில் காளையர்
மதிமுகத் தாருடன்
வரம்பில் வெய்யவர்
முதுவரைச் சிகரமேல்

முடுகிச் சென்றென. 74

110 கூற்றினை வென்றிடுங்
கொலைக்க ணார்சிலர்
ஏற்றமில் பிடிமிசை ஏறிப்
போந்தனர்
ஆற்றல தின்மையால்
அவர்ந டைக்குமுன்
தோற்றன நாணியே
சுமத்தல் போன்றவே. 75

111 காமரு கொங்கையாற்
கரிம ருப்பினை
ஏமுற வென்றுளார்
யானைக் கோடுகள்
மாமருங் கடைதலும்
மருண்டங் கோடினார்
தாமுதற் செய்வினை
தம்மைச் சூழ்ந்தென. 76

112 விரிதரு சேனையில்
விண்ணிற் பாய்தரு
பரிகளின் மடந்தையர்
பலரங் கேகினார்
கரையறும்அமரர்கள்
கடைந்த பாற்கடல்
திரைதனில் வருபல
திருவைப் போலவே. 77

113 மேகம துற்றிடு மின்னின்
மீமிசைப்
போகிய சிலையொடும்
போந்த தன்மைபோல்
பாகினை யன்னசொற்
பாவை மா£நர
வாகனம் அவைகளின்
மருவி யேகினார். 78

114 அவிகையில் முழுமதி
அளிப்பப் பல்பொறி
குவிகையி லம்புயங்
குலவிச் சென்றெனக்
கவிகையி லாதபங் கரப்ப
மூடுபொற்
சிவிகையி லேகினார் 79
தெரிவை மார்சிலர்.

115 வேறு
பரதனங் கவரும் அல்குற்
பரத்தையர் தம்மைப்
பாரா
விரதநன் முனிவர்
தாமும் வேதியர் பலரும்
ஈண்டிச்
சுரதநண் புடைய ராகுங்
கணிகையர் தோளால்

தாளால்
உரதனந் தன்னால் தாக்க
உளைந்துளைந்
தொதுங்கிப் போனார். 80
116 வேண்டிய மாற்றங்
கொள்ளாள்
வெகுண்டுசென்
றிடுவாள் முன்னம்
ஆண்டொரு மதமால்
யானை அடர்த்துவந்
திடலும் அஞ்சிப்
பூண்டிடு புலவி நீங்கிக்
கணவனைப் புல்லிக்
கொண்டாள்
தூண்டரு தோளி னானும்
இபத்தினைத் தொழுது
நின்றான்.

81

117 கூமருங் கலாப மஞ்ஞை
இனமெனச் செல்லு
மாதர்
மாமருங் கிறுங்கொல்
இற்றால் மதன்அர
சிறக்கும் என்றே.
காமருங் கவற்சி
கொள்ளக் கரத்தினால்
அவரைப் புல்லித்
தாமருங் காகப் போனார்
தார்முடி இளைய
ரானோர். 82

118 கணவன்தன் பிழையை
உன்னிக் கனன்றிடுங்
கணவன் தோளை
அணைவுறா நீர்மை

உன்னி மகிழ்ந்திடும்
இவ்வா றாகிப்
மணவினை தன்னை
உன்னி மகிழ்ந்திடும்
இவ்வா றாகிப்
புணர்கயிற் றூசல்
போலும் புந்திகொண்
டொருத்தி போனாள். 83
119 கையிலார் கைகள்
பெற்றும் காலிலார்
கால்கள் பெற்றும்
மொய்யிலார் மொய்கள்
பெற்றும் மூங்கைகள்
மொழியைப் பெற்றும்
மையல்சேர் குருட
ரானோர் வாள்விழி
பெற்றுஞ் சென்றார்

ஐயன்மேல் உள்ளம்
வைத்தார்க் கனையதோ
அரிது மாதோ. 84

விடந்தரு வேற்கண்
நல்லாள் வெள¤ப்படு
கொங்கை தன்னைப்
படந்தனில் மறைத்த
லோடும் பாங்கிலோர்
காளை பாராத்
தொடர்ந்தனன்
அவள்பின் போனான்
துணைமுலைப் படத்திற்
சிக்கிக்
கிடந்ததன் மதியை
மீட்கக் கிலேசமோ டேகு
வான்போல். 85

121 நெய்தலுங் கமலப்
போதும் நீலமும்
நெடுநீர்ப் பொய்கை
கொய்தனர் குமர
ரானோர் கொடுங்குழை
மடந்தை மார்தங்
கைதனிற் கொடுத்துச்
செல்வார் கன்னிமீர்
இவையோ நுங்கண்
மைதிகழ் விழிக்குத்
தோற்ற மலரெனக் காட்டு 86
வார்போல்.
122 அரிசன மேனி நல்லாள்
அணிதுகில் அசைவின்
சீரால்
கரிசனம்* அன்ன
கொங்கை காண்டலுந்

தளர்ந்தோர் காளை
தெரிசனந் தன்னில்
ஈதென் சிந்தையைப்
பிணித்த தென்றால்
பரிசனந் தனில்என்
னாமோ என்றுயிர்
பதைத்து நின்றான்.
( * கரிசனம் - 87
யானைக்கோடு.)

123 கற்பக வல்லி அன்னாள்
ஒருத்திதன் காதல் மூழ்கி
அற்பகல் ஏவல்
செய்வான் ஆங்கவள்
செல்லும் போதில்
பொற்புறு படாத்தின்
நீங்கிப் பூண்முலை சிறிது
தோன்றப்

பற்பகல் நோற்று
வேண்டும் பரிசில்பெற் 88
றாரை ஒத்தான்.
124 ஒப்பிலா ஒருவேற்
காளை ஒள¢ளெயிற் றூறு
தாங்கித்
துப்புறு பவளச்
செவ்வாய் திறக்கலள்
சொல்லும் ஆடாள்
அப்படி ஒருத்தி செல்ல
அநங்கவேள் அமுதம்
வைத்த
செப்பினிற் குறியுண்
டாங்கொல் திறக்கலீர்
சிறிது மென்றான். 89
125 புடைதனில் ஒருத்தல்
புல்லப் போவதோர்

பிடியின் மேவும்
மடவரல் வெருவ
லோடும் மற்றது
கண்டோர் வள்ளல்
இடையகல் தேரும்
மாவும் யானையும்
படையுங் கொண்டீர்
கடகரி ஒன்றற் கஞ்சுங்
காரணம் யாதோ
என்றான்.
126 ஆழியில் அமுதம்
பொங்கி அலையெறிந்
தொழுகிற் றென்ன
ஏழிசை நரம்பு கொண்ட
மகரயாழ் இசையப்
பண்ணி
வேழமுந் தேரும் ஊர்ந்து

விறலிய ரோடு பாணர்
நீழலும் பருந்து மென்ன
நெறிப்பட இசைத்துப்
போனார். 91

127 வெங்கரி நுதலில்
அப்பும் வீரசிந் துரம்வில்
வீச
மங்கையர் மைந்தர்
பூணும் படைகளும்
வயங்க மாடே
தொங்கலுங் கவிகைக்
காடுந் துவசமும்
இருளைச் செய்யக்
கங்குலும் பகலும்
மாலைக் காலமும் போலு
மாதோ.
92

128 கொக்கரை படகம் பேரி
குடமுழாக் கொம்பு
காளந்
தக்கைதண் ணுமைத டாரி
சல்லரி நிசாளந் தாளம்
மெய்க்குழல் துடியே
பம்பை வேறுபல்
லியமுந் தாங்கி
மைக்கடல் வாய்விட்
டென்ன வரம்பிலோர் 93
இயம்பிப் போனா£.
129 ஆரண முனிவர் தாமும்
அமரரும் அகல்வான்
செல்வார்
சீரணி முசுகுந் தன்மேல்
திருமலர் சிதற லுற்றா£
காரண மில்லா வள்ளல்

கடிமணந் தாமுங்
காண்பான்
தாரணி தன்னிற் செல்லுந்
தாரகா கணங்கொ 94
லென்ன.

130 இன்னன சனங்கள் ஈண்டி
எங்குமாய் ஏகும்
எல்லைத்
தன்னுறு கிளைஞர்
தாமுந் தந்திரக் கிழவர்
யாரும்
முன்னொடும் பின்னும்
பாங்கு மொய்த்துடன்
செல்லத் தானோர்
பொன்னெடுந் தேர்மேல்
கொண்டு முகுந்தன்
போத லுற்றான்.

வேறு 95

131 அடவியும் இகந்தனன்
அகணி நாட்டுடன்
இடையிடை அடுக்கலும்
யாறும் நீங்கினான்
படர்தலும் அவன்வழிப்
பரிதி நாயகன்
நடுவுறும் உச்சிமேல்
நண்ணி னானரோ.

96

132 அண்ணலம் படைகளும்
அளப்பின் மாக்களும்
உண்ணெகிழ்
உவகையோ டொல்லை
வந்திடத்
தண்ணிழல்
வெண்குடைத் தரணி

காவலன்
பண்ணவன் மேவுறு
பரங்குன் றெய்தினான். 97
133 முசுமுக முடையவன்
முன்னர் வந்துழி
வசுமதி இறைபுரி மன்னர்
ஏவரும்
அசைவறு திருவொடும்
அனிகந் தன்னொடுந்
திசைதொறுந்
திசைதொறுஞ் சென்றங்
கெய்தினார். 98
134 முறைநெறி யாற்றிடும்
முசுகுந் தன்முதல்
இறையவர் யாவரும்
ஈண்டு தானையுங்
குறைதவிர் சனங்களுங்

குன்றஞ் சூழ்ந்துற
நிறுவினர் ஒன்றிய
நெஞ்சங் கொண்டுளார். 99

135 புழையுறு கரங்களாற்
போத கஞ்சில
உழைவரு பிடிதனக்
கும்பர் தாருவின்
குழைகளை முறித்தன
கொடுத்துக் கோட்டினான்
மழைமுகில் கீறியே வாரி
நல்குவ. 100

136 படர்சிறை நீங்கிய
பராரை வெற்பெலாம்
அடிகளின் ஒற்றியே
அசைந்து போந்தெனக்
கடிகமழ் மும்மதக் கரிகள்
ஓர்சில

விடலருந் தளையொடு
மெல்லச் சென்றவே. 101

137 மூடுறு கணமுகில்
முழக்க றாததோர்
கோடுயர் குன்றினைக்
குறித்து நோக்கியே
ஈடுறு திசைக்கரி முதென்
றுன்னியே
ஓடுவ ததன்மிசை
ஒன்றொர் யானையே. 102

138 வேறு
கலையகல் அல்கு
லார்பாற் காதலான்
முயங்கி வல்லே
உலைவுறு சேக்கைப்
போரில் உடைந்திடு
குமர ரேபோல்

மலைபொரு பிடிக
ளோடு மலைந்துதம்
மதநீர் சிந்தி
நிலையழி வெய்தி
வெள¢கி நின்றதோர்
நெடுநல் வேழம். 103
139 உடம்பிடி புரையும்
ஒண்கண் மோகினி
யொருத்திக் காகத்
திடம்படும் அவுணர்
யாருந் திரண்டுடன்
சென்ற வாபோல்
மடம்படு பிடியொன்
றேக மையல்மேல்
கொண்டு மாடே
கடம்படும் ஒருத்தல்
வேழங் கணிப்பில

படர்ந்த அன்றே. 104

140 காழுற்ற தந்தம் மின்னக்
கபோலத் துமதநீர் வீழ
ஊழிப்பேர் உருமுத்
தன்னை உமிழ்ந்தென
ஒலிமீக் கொள்ளக்
கேழுற்ற மணிவில்
லென்னக் கிளர்நுதல்
ஓடை பொங்க
வேழத்தின் நிரைக
ளெல்லாம் மேகம்போ
லுலாவு கின்ற. 105

141 இருநெடு விசும்பிற்
செல்லும் எழிலியை
எயிற்றாற் பாய்ந்து
சொரிதரு புனலை வாரித்

துதிக்கையால் வீசு கின்ற
பருமணி யோடை
யானை பாய்திரைப்
பரவை ஏழுங்
கரதலம் எடுத்துச் சிந்துங்
கண்ணுதற் களிறு
போலும். 106
142 கன்றொடு பிடிகள் சூழக்
கடாம்படு கைம்மா
ஒன்று
நின்றிடு கந்திற் சேர்ந்து
நிகளத்தோ டமர்ந்த
நீர்மை
குன்றுகள் புடையிற்
சுற்றக் குருமணி நீலப்
பொற்றை
ஒன்றொரு தமிய தாகி

உற்றவா றொத்த தம்மா. 107

143 எருத்தமேல் இடிக்கும்
பாகர் இசைக்குறி
கொள்ளா தாகி
மருத்தினும் விசைமேற்
கொண்டு வன்கரித்
தண்ட நோக்கி
உருத்திடு கொடுஞ்சொல்
தாயர் ஒறுக்கவும்
ஒருவன் மாட்டே
கருத்துறு கணிகை
நெஞ்சிற் போவதோர்
கடுங்கண் வேழம். 108

144 தூவகங் கொண்ட
செங்கேழ் அங்குசந்
தூண்டு பாகர்

நாவகங் கொண்ட
சொல்லான் நவிற்றுமந்
திரத்தால் வாக்கால்
பாவகங் கொண்ட
பைங்கட் பாரிடம்
வழப்பட் டாங்குச்
சேவகங் கொண்ட
பொங்கர் சேர்ந்தன
சிலகைம் மாக்கள். 109
அந்தமி லாத செல்வத்
தவுணருக் கரசன்
முன்னம்
வெந்திறற் கால்கள்
தம்மை வியன்சிறைப்
படுத்தி யென்னக்
கந்திடைப் பிணிக்கப்
பட்ட கடுநடைப் புரவி

யெல்லாம்
பந்தியில் ஒழுங்கு
கொண்டு நின்றன பாங்க 110
ரெங்கும்.

146 வீரவேல் தடக்கை
வள்ளல் விழவினைக்
காண விண்ணோர்
ஊரொடு திசையும் ஏனை
உலகமும் ஒருங்குற்
றென்னக்
காரினும் ஒலிமேல்
கொண்ட கலினவாம்
புரவி பூண்ட
தேர்நிரை அநந்த கோடி
செறிந்தன திசைகள்
எங்கும். 111

147 விடங்கெழு வேற்க

ணாரும் வெலற்கரும்
வீரர் தாமுந்
தடங்கெழு தானை
வெள்ளைத் தலைவரும்
ஏனை யோரும்
இடங்கெழு துளைத்துன்
னூசி இழைதொடுத்
திசைக்கப் பட்ட
படங்கெழு மாட கூடத் 112
தாவணம் பரவிப் புக்கார்.
148 கன்னெடுந் தாரை கான்ற
கார்முகில் வளைப்ப
செங்கண்
முன்னவன் நிரையைக்
காத்த முதுவரை நிலைய
தென்னப்
பன்னிறப் பசுங்காய்

சிந்தும் பழுமரக் காமர்
காவுட்
பொன்னிவர் புனைமாண்
கோயில் புரவலற்
கமைந்த தன்றே. 113

149 முத்தமுந் துகிரும்
பொன்னும் முழுமணிக்
கலனுஞ் சந்துஞ்
சித்திரப் படமும் மற்றுந்
தெற்றிமேல் நிரைத்துச்
சீர்சால்
உத்தம வணிகா¢ உற்றார்
உயர்ச்சியுங் கற்புந் தூக்கி
அத்தகு பொருளை
யார்க்கும் அளித்திடுங்
கொடையி னார்போல். 114

150 மடப்பிடி மான்தேர் நீங்கி

வானிடைத் தவறி
மின்னின்
கொடித்திரள் செல்லு
மாபோல் குவலயம்
படர்ந்து பொங்கர்
இடத்தினில் ஒதுங்கி
வெற்பின் எதிரெதிர்
கூவி மஞ்ஞை
நடித்திடும் ஆடல்
நோக்கித் திரிந்தனர்
நங்கை மார்கள். 115
151 கோலொடு வில்லும்
வாளுங் குந்தமும்
வயங்கப் பாத
சாலமுங் கழலும்
ஆர்ப்பத் தபனிய
மணித்தார் தாழச்

சோலையின் உலவிச்
சாரல் அருவியுஞ்
சுனையுங் கண்டு
மால்கரி மலையும்
நோக்கி மடங்கலில்
திரிந்தார் மைந்தர். 116
152 தாரிடைப் படிந்த வண்டு
தடமலர்க் குவளை சேர
வாரிடைப் படிந்த
கொங்கை மாதரும்
மைந்தா¢ தாமும்
ஊரிடைப் படிந்த
செங்கேழ் ஆதவன்
உருப்பந் தீர
நீரிடைப் படிதல் வேட்டு
நெடும்புனல் துறையில்
வந்தார்.

117

153 வெண்ணிற முகிலின்
உம்பர் விஞ்சையர்
வேந்தர் தாமும்
ஒண்ணுதல் அணங்கி
னோரும் ஒருங்குடன்
திரண்ட தென்னக்
கண்ணகல் தடாகம் புக்க
கனங்குழை மகளிர்
மைந்தர்
தண்ணுறு புனல்பாய்ந்
தாடித் தலைத்தலை
திரிதல் உற்றார். 118

154 கழியுண்ட உவரிக் கானற்
கடைசியர் நாட்டம்
அஞ்சிப்
பழியுண்டு மறைந்த

வாபோல் ஒருசிறை
பயிலு நெய்தற்
குழியுண்ட போதை
நோக்கிக் குரைபுனல்
தடத்துக் கம்மா
விழியுண்டு கொல்லோ
என்றே கொழுநரை
வினவு கின்றார். 119

155 பங்கயம் வதனம்
என்பார் பாசியைக்
கூந்தல் என்பார்
செங்கிடை அதரம்
என்பார் புள்ளொலி
செப்பல் என்பார்
சங்கினைக் களமே
என்பார் தடாகமும்
ஒருத்தி யல்ல

மங்கையர் பலரே
என்பார் திரைகளை 120
மணித்து ரென்பார்.
156 தத்தையை யனைய
சொல்லாள் ஒருத்திதன்
நீழல் தன்னை
அத்தடந் தன்னில்
நோக்கி அளியனை
அறியா தீண்டோர்
மைத்தடங்
கண்ணினாளை
மருவினை என்று
கேள்வன்
கைத்தலந் தன்னை
விட்டு வெகுண்டனள்
கரையிற் போனாள். 121
157 குளத்திடைப்

புனல்வாய்ப் பெய்து
கொப்பளித் திடுவான்
தன்மேல்
உளத்திடை வெகுளி
யெய்தி ஊடினள் ஒருத்தி
ஏகி
முளைத்திடு கமலக்
கானின் முகமலா வுறுப்பு
முற்றும்
ஒள¤த்தனள் நிற்ப நாடிக்
காண்கலன் உலைதல்
உற்றான். 122

158 தாம்பெறு கொழுநர்
தம்மைத் தத்தமக் குரிய
புத்தேள்
ஆம்பரி சுன்னுந் தன்மை
ஐயம தில்லை யென்னக்

காம்புறழ் தடந்தோள்
நல்லார் கணவர்மேற்
கரத்தால் அள்ளிப்
பூம்புனல் வீசு கின்றார்
பூசனை புரிகு
வார்போல். 123

159 ஞெண்டொடு வராதலுஞ்
சேலும் யாமையும்
நிலாவெண் சங்கும்
புண்டரீ கத்த டாகங்
குடைந்திடும் பூசல்
அஞ்சித்
தெண்டிரை அமுதச்
சொல்லார் சிற்சில
உறுப்புத் தன்னைக்
கண்டுகண் டிரிவ
தென்னத் திரிவன கலக்க

மெய்தி. 124
160 ஏந்திழை மகளிர் தாமும்
மைந்தரும் இருநீர்
தன்னுட்
பாய்ந்தன ராடும்
எல்லைப் பங்கய
விலைக டோறுஞ்
சேர்ந்திடு திவலை
ஈட்டஞ் சிறந்தவர் சேர்த
லாலே
பூந்தடம் பொய்கை
யாக்கை பொடித்தன
போலும் அன்றே. 125
161 நோக்கினும் நுழைகு றாத
நுண்துகில் மறைத்த
அல்குல்
தேக்குதண் பொய்கை

யாடுஞ் செவ்வியில்
தெரியத் தோன்ற
நீக்கரும் பெருநாண்
கொண்டு நின்றிடா
தொருத்தி யோடித்
தாக்கணங் கென்னப்
போய்த்தன்
கொழுநனைத் தழுவி 126
கொண்டாள்.
162 உட்டெள¤ வில்லா
நங்கை ஒலிபுனல்
தடத்தின் ஆடுங்
கட்டழ குளதோர் காளை
கவிரிதழ் வெளுப்பு
நோக்கிக்
கிட்டியான் நிற்க உன்றன்
கேழ்கிளர் அதரத்

தெச்சில்
இட்டனள் யாரிங்
கென்னா வெகுளிகொண் 127
டிகலிப் போனான்.

163 வேறு
வெளுத்தன சேயிதழ்
விழிசி வந்தன
அளித்தொகை எழுந்தன
அளகஞ் சோ£ந்தன
குளித்திடு மலர்த்தடங்
கொடிய னார்க்கெலாங்
களித்திடு கணவருங்
கள்ளும் ஒத்ததே. 128

164 பையர வல்குலார்
படியும் பான்மையால்
துய்யதோர் குமிழிகள்

செறிந்து தோன்றுவ
வையபூந் தடமெலாம்
அவரை நோக்குவான்
மெய்யெலாம்
விழிகளாய் விழித்தல் 129
போன்றவே.

165 மன்னரும் மகளிரும்
படிந்த வாசநீர்
செந்நிறக் குங்கும
நானஞ் சேர்தலான்
மின்னொடு கூடிய
முகிலு மெல்லியல்
பொன்னொடு கூடிய
மாலும் போலுமால். 130

166 வேறு

பூசு சாந்தமும் நானமும்

பொய்கையில்
வாச நீரெங்கும் மாகி
மணங்கமழ்ந்
தாசை யெங்கும் உலாவி
அவ்வானவர்
நாசி யூடு மடுத்து 131
நடந்தவே.
167 இன்ன தன்மையில்
ஏர்கெழு மைந்தரும்
அன்ன மென்னடை
யார்களும் அத்தடந்
தன்னின் ஆடித்
தடங்கரை ஏறியே
பொன்னின் மாண்கலை
பூணொடு தாங்கினார்.
132

168 வெள¤று மென்னகை

மெல்லியல் மாதரும்
ஒள¤று மேனி
உவாக்களும் ஒன்றியே
பிளிறு மையற் பிடியும்
பெருமதக்
களிறு மென்னக்
கடிபொழில் ஏகினார். 133
169 ஏகி னார்க்கவ்
விரும்பொழில் மீச்செறி
மேக சாலமும்
மீன்தொகை ஈண்டிய
மாக நாடும்அவ்
வானவர் வந்துசேர்
போக பூமிப்
பொதும்பரும்
போன்றதே. 134
170 பளிங்க டுத்திடு

பாங்கா¤ன் வேங்கைவீ
விளங்கு சாயையை
மெய்யென நோக்கியிக்
குளங்கொள் பூமலர்
கொய்துநல் கீரெனாத்
தளர்ந்தொ ருத்தி
தலவனை வேண்டினாள். 135

171 அங்கொ ருத்தியை
நோக்கியொ ரண்ணலுன்
கொங்கை யொத்திடாக்
கோங்கலர் கொள்கென
வெங்கை தன்முலைக்
கொப்பதென்
றெண்ணியோ
செங்கை யாற்பறித்
தீரென்று சீறினாள். 136

172 வேறு

மலர்ந்த வாள்முக
முங்கையர் நோக்கலும்
வறிதாய்ப்
புலர்ந்து நின்றிடு
தருக்களும்
பொலிவினை யெய்தி
அலர்ந்த வேயெனின்
ஆடவர் தங்களை
அன்னார்
கலந்த போதுறு
மின்பமார் கட்டுரைத்
திடுவார். 137

173 மேற்ற லத்தெழு தாரகை
மேதினி வரைப்பில்
தோற்று காட்சியோ
இங்கிவை என்னவோர்

தோன்றல்
கூற்ற மன்னவேற்
கண்ணிநின் கூரெயிற்
றிற்குத்
தோற்ற முல்லையின்
அரும்புகாண்
இவையெனச்
சொன்னான். 138

174 மலையும் மேற்கணாள்
ஒருத்திசொல் வினவிமற்
றொருத்தி
முலையின் மேல்விழி
வைத்தவன் முறிகளும்
முகையும்
இலையு மாப்பறித்
துதவலும் உமக்குமால்
ஈந்தாள்

தலையின் மேலிவை
சூட்டுமென் றெறிந்தனள்
தரியாள். 139

175 காதல் மங்கைபால்
வைத்தசிந் தையன்
கரவீரப்
போது கொய்யலன்
இலைகொய்து பொற்கரத்
தளிப்ப
ஏதி லாளநிற் சேர்தலின்
இங்கிவை நுகா¢ந்து
சாத லேதலை எனச்சினத்
தாளொரு தையல். 140

176 வேறு
இங்கு முலைநேர்
குரும்பை இவையாய்

குயம்போல்
தங்கும் மிளநீர்
உவையன்னவள்
தன்னை ஈன்றாள்
கொங்கை நிகரும்
அடற்பாளைக் குழுவி
தென்றோர்
மங்கை நகைப்ப
அவைகாட்டியொர் 141
வள்ளல் நின்றான்.
177 ஒவாத தெங்கின்
இளம்பாளையின் ஒன்று
தன்னைத்
தாவா ஒருவன்
கொடுவந்தொரு தையல்
முன்போய்ப்
பாவாய் தமியேன்

உயிரேநின் பணைமு
லைக்காங்
கோவாத முத்தத்
தொடையிங்கிது கொள்க
வென்றான். 142

178 மின்னார் தமக்கோ
ரரசேவெறி வேங்கை
வீயும்
புன்னாக வீயுங்
கொணர்ந்தேன்
புனைகிற்றி என்ன
மன்னா வுனக்குப்
பலருண்டுகொல் மாதர்
என்னாத்
தன்னாவி அன்னான்
தனைச்சீறியொர் தையல்
போனாள்.

179 பொன்பெற்ற மார்பன்
ஒருவன்சில போது
கொய்து
கொன்பெற்ற வேண்கண்
மடவார்கைக் கொடுத்த
லோடும்
பின்பெற்ற நங்கை
வெகுண்டாள்
பழுதென்று பேசி
முன்பெற் றவளும்
அவைசிந்தி முனிந்து
போனாள். 144
180 அப்பூர் விழியாள்
ஒருமூவகைத் தாய
பூவும்
மைப்பூங் குழலிற்

புனைந்தாளதொர்
வள்ளல் நோக்கி
மெய்ப்பூவை யன்னாய்
மருங்குல்முடி வெய்த
மென்கார்
முப்பூ விளைந்த
படியென்கொல் மொழிக
வென்றான். 145
181 இத்தன்மை மைந்தர்
பலரும்மிகல் வேற்க
ணாரும்
மெய்த்தண் மலர்க்கா
வுலவாவிளை யாடி
மீண்டு
தத்தம் படமா
ளிகைபுக்கனர் தானும்
ஆங்கே

அத்தம் மயவெற்
படைந்தான்கதிர் ஆயி
ரத்தோன். 146

182 வேறு
ஏலக் காவின் மாக்கள்
புகுந்தே இனிதாடும்
கோலச் செவ்வி
நோக்கின னாங்கொல்
குடபாலின்
மாலைச் செக்கர் வானம
தாகும் மலிதண்பூஞ்
சோலைக் குள்ளே
தானும் அடைந்தான்
சுடர்வெய்யோன். 147

183 முந்தைச் செக்க ராகிய
புத்தேள் மொய்ம்பிற்சூழ்
தந்திப் போர்வை

போலிருள் ஈட்டஞ்
சார்வெய்த
அந்தத் தேவன் மீமிசை
அண்டத் தவர்வீசும்
கந்தத் தண்போ
தொப்பன தாரா
கணமெல்லாம். 148
184 படையா நேமிப்
பண்ணவ னார்பாற்
கடலுக்கோர்
தடையா யுற்றார்
என்றிமை யோர்தண்
தயிர்வேலை
கடையா நிற்ப வேதிரள்
வெண்ணெய் கடிதேவந்
தடையா நிற்றல் போல
உதித்திட் டதுதிங்கள். 149

185 காணப் பட்டான்
விண்மதி என்னக்
காமத்தில்
பூணப் பட்ட மாமதி
தோன்றப் புலர்வெய்தி
யாணர்க் கிண்ணத்
துள்நிறை தேறல்
இனிதட்டிப்
பாணிக் கொண்டே
மேவுதல் உற்றார்
பலமாதர்.
186 வேறு
தூயதன் றாகிய
புனலெலாம் நல்கியே
சூழ்ந்த தெங்கின்
காயின்வந் திடுபயன்
கொள்ளுவார் போற்சில

காளை மார்கள்
ஆயதண் தேறலை
அரிவைமார் நுகருவான்
அருளி யன்னார்
வாயின்வந் தூறு
மெல்லமிர் தினைக்கொள் 151
வதற்குள்ளம் வைத்தார்.
187 தெள¢ளுபேர்
அமிர்தநேர் சொல்லினார்
தேறல்பெய் கின்ற
வெள¢ளி
வள்ளமா னவையெலாம்
பொலிவன வானகத்
திடையு தித்த
வெள¢ளிதா கியமதி
ஒன்றினை நோக்கிஒண்
புவியி னூடே

கொள்ளையாய் மதிபல
மாறுமா றாய்எழுங்
கொள்கை போலும்.

188 அளியினுக் குணவதாந்
தேறல்வாய்க்
கொண்டதோர் அரிவை
யாற்றக்
களிமயக் கெயதுவாள்
இந்துவை நோக்கியிக்
கடிய தேறல்
துளியினைக் கோடியேல்
உனதுமா சுள்ளதுந்
தொலையும் இன்னும்
ஒள¤யினைப்
பெறுதிநின் ஊனமுந்
தவிர்தியென் றுரைசெய்
கின்றாள்.

153

189 கருதியான் உண்டிடு
நறவினைக் கண்டுகா
மித்து நாளுந்
திரிதியால் மதியமே
நாணமுற் றாய்கொலோ
செப்பு கில்லாய்
பரிதியார் தம்மின்
வீறெய்துவாய்
அன்னதைப் பகிர்வன்
இங்ஙன்
வருதியால் என்றனள்
தேறலால் தெள¤விலா
மையல் பெற்றாள்.
154

190 என்னொடே
தோன்றினாய்

யானெனும் தன்மையா
யாதும் வேண்டாய்
பின்னரு முன்னுமாய்
வைகலுந் திரிகுவாய்
பிரிகி லாதாய்
இன்னறா உண்கெனா
உதவினுங் கொள்கிலாய்
என்றொ ருத்தி
தன்னதாம் நீழலோ
டூடினாள் வாடினாள் 155
தளர்தல் உற்றாள்.
191 அங்கைவள் ளந்தனில்
மதுவையுண் டயருவாள்
அன்ன தற்குள்
செங்கயல் விழியையும்
வாலிதழ்ப்
பொலிவையுந் தெரிய

நோக்கி
இங்கெனைக் கூடியே
கணவர்போ
யினர்கொலாம் என்றோ
ருத்தி
பொங்குசீற் றத்தளாய்
ஓடினாள் நாடினாள்
புலர்தல் உற்றாள். 156

192 வேறு
திருந்திழை மார்சிலர்
செவ்வித் தேறலை
அருந்தினர் வெறுத்தனர்
அமுதந் தன்னையும்
பொருந்திடு கணவரைப்
புணரும் ஆசையால்
வருந்தினர் தழலென
மதியை உன்னுவார்.

157

192 வாடுகின் றார்சிலர்
மகிழ்நர் வந்திட
ஊடுகின் றார்சிலர்
உவக்கின் றார்சிலர்
பாடுகின் றார்சிலர்
பணிகின் றார்சிலர்
ஆடுகின் றார்சிலர்
நறவம் ஆர்ந்துளார். 158

194 அந்தரப் புள்ளொடும்
அளிகள் தம்மொடும்
வந்தடுத் தவரொடும்
மடந்தை மார்சிலர்
சுந்தரத் தேறலைத்
துய்த்து வாமமாந்
தந்திரக் கிளைஞர்போல்
தம்மில் ஈண்டினார். 159

195 விள்ளுறு நாணினர்
வீழுந் தூசினர்
உள்ளுறு களிப்பினர்
உரைம மயங்கினர்
தள்ளுறு தம்முணர்
வின்றிச் சாம்பினார்
கள்ளினும் உளதுகொல்
கருத்த ழிப்பதே. 160

196 இத்திற மதுவினை
இனிதின் மாந்தினோ£
மத்தரின் மயங்கினர்
மனந்தெ ளிந்துழத்
தத்தம திறைவருந்
தாமுங் கூடியே
அத்தலை முயங்கினர்
ஆர்வ மிக்குளார். 161

197 ஏயுறு பரிசனம் இனைய
தன்மையான்
மேயின இங்கிது
விளம்பி னாம்இனி
ஆயிடை வந்திடும்
அரசர் செய்கையும்
நாயகன் வதுவையும் 162
நவிலு வாமரோ.

198 கொன்னுனை வேல்முசு
குந்த னாதியாம்
மன்னவர் யாவரும்
வையம் நீங்கியே
தன்னிகர் இலாததோர்
தலைவன் மேவிய
பொன்னிவா¢ குடுமியம் 163
பொருப்பில் ஏறினார்.

199 ஏறினர் வெற்பின்

மேலெவருந் தெய்வத
நூறெறி கம்மியன்
நுனித்துச் செய்திடு
மாறகல் திருநகர்
வளங்கண் டிந்திரன்
சாறயர் வதுவையஞ்
சாலை நண்ணினார். 164

200 அம்முசு குந்தனை யாதி
யாகிய
வெம்முடி மன்னரும்
இமைய வர்க்கிறை
செம்மலர் அடிகளைச்
சென்னி சேர்த்தினார்
கைம்முறை தொழுதனர்
களிப்பின் மேலுளார். 165

201 கயமலர் குவளையில்

கண்கள் மிக்குளான்
அயலுறும் அரசருக்
கருளி ஆங்கவர்
செயல்முறை வினவியே
சிறப்பி னாகிய
நயமொழி பலவுடன் 166
நவின்று மேவினான்.

202 மேதகு கதியராய்
விசும்பிற் சென்றிடும்
மாதவன் மதிமுதல்
அமரர் யாவரும்
மாதிர இறைவரும் மாத
வத்தரும்
பாதல வாணரும்
பரங்குன் றெய்தினார். 167

203 விண்டொடர் பிறங்கலின்
மிசையி வர்ந்துபோய்

அண்டரும் பிறருமாய்
அமரர் கோன்தனைக்
கண்டனர் தொழுதனர்
களிப்பின் மாதவர்
எண்டகும் ஆசிகள்
இயம்பி எய்தினார். 168

204 விறல்வரை மாதரும்
விண்ணின் மாதருஞ்
செறிபுனல் மாதருந்
திசையின் மாதரும்
உறுதவ மாதரும் உரக
மாதரும்
மறுவகல் புலோமசை
வயின்வந் தீண்டினார். 169
205 சூரர மங்கையர்
தொல்லை விண்ணவர்

பேரர சியற்றிய
பிரான்றன் காதலி
சீரடி வந்தனை செய்து
தெய்வத
வாரண மென்பவள் 170
மருங்கில் எய்தினார்.

206 தெய்வத யானைகேள்
தீய சூருயிர்
வவ்விய வேலினான்
மனைவி யாதியால்
எவ்வுல கிற்குநீ இறைவி
யாமென
அவ்வவர் அடிபணிந்
தன்பொ டேத்தினார். 171

207 கயற்புரை நோக்குடைக்
கடவுள் யானைபால்
இயற்படு திருநலன்

இருக்கப் பின்னருஞ்
செயற்படு கோலமுஞ்
சிறிது செய்திட
மயற்பட உன்னினர்
மடநல் லாரெலாம். 172

208 பொன்னகம் அதனிடைப்
புராரி சேயினைத்
தன்னக மிசைகொடு
தவத்தை ஆற்றினாள்
பின்னக மயிர்முடிப்
பிணையற் சூழலை
மென்ன விரல்களால்
மெல்ல நீக்கினார். 173

209 காசறை விரவிய
கடிமென் கூந்தலில்
பூசினர் நாவிநெய் புதிய

சாந்தமும்
மாசறு பளிதமும் மற்று
நீவியே
நேசமொ டொண்பனி 174
நீர்கொண் டாட்டினார்.
210 சேர்ந்ததோர் வெம்பணி
சீற்றத் தாற்கரும்
பாந்தளை வாய்க்கொடு
பற்று மாறெனப்
பூந்துகில் கிழிகொடு
புனல்வ றந்திடக்
கூந்தலை ஒற்றினர்
குழைமென் கொம்பனார்
>
175

211 மாந்தளி ரேயென
வனப்பும் மென்மையுங்

காந்தியும் எய்தியே
கடவுட் டன்மையால்
தோய்ந்திட லின்றியுந்
துப்பின் வண்ணமாம்
பூந்துகில் ஒன்றினைப்
புனைந்து டீஇயினார். 176

212 ஈரறு கதிர்களும் இம்பர்
சேர்தலின்
ஆரிருள் யாவையும்
அஞ்சி அவ்வைதன்
வாரொலி கூந்தலின்
மறைபுக் காலெனக்
காரகில் நறும்புகை கமழ
ஆட்டினார். 177

213 பொலம்புரி உத்தியும்
பொருத மஞ்ஞையும்
வலம்புரி மகரமும்

மரபில் வானவா¢
குலம்புரி தவம்புரை
கொம்பின் கூழையின்
நலம்புரி மங்கலம்
நவின்று சாத்தினார். 178

214 விரியிணர்க் கோங்கமும்
வெட்சி யுஞ்செரீஇ
மருமலர்1 இதழிடை
வைத்து வாசமார்
தெரியலு¢தொடையலுஞ்
செறியச் சூட்டியே
சுரிகுழல் முடித்தனர்
சுழியத் தன்மையால்.
(பா-ம் 1 இடையிடை) 179

215 ஒருமுயல் முழுமதி

யுள்புக் காலென
இருவிழி புருவமாமம்
இனைய வற்றொடு
கருநிறங் கண்டிடக் காமர்
சாந்தினால்
திருநுதல் அதனிடைத்
திலகந் தீட்டினார். 180

216 ஊட்டிய நறும்புகை ஓதி
நின்றொழீஇத்
தீட்டிய திருநுதல் திலகந்
சேர்தரப்
பூட்டினர் சுட்டியைப்
புயங்கம் ஒன்றுநா
நீட்டிநஞ் சுமிழ்தரு
நிலைமை ஈதென. 181

217 கோல்வளை யந்நலார்

குழையில் வல்லியஞ்
சூல்வளை மிடற்றினில்
தொடையல் முத்தணி
கால்வளை கஞ்சநேர்
கரத்துந் தோளினும்
வால்வளை தொடியிவை 182
வயங்கச் சேர்த்தினார்.

218 கொட்டினர் கலவைகள்
கொங்கை யின்மிசை
மட்டிமிர் பிணையலும்
மணியின் கோவையும்
அட்டினர் படாமும்ஒன்
றதன்கட் சேர்த்தினார்
இட்டிடை யிடைதனக்
கிரக்கம் வைக்கிலார். 183

219 மாடக யாழ்புரை

மழலைப் பெண்பிளை
ஆடக விரைமலர்
அனைய தாள்களில்
பாடகம் பரிபுரம் பாத
சாலங்கள்
சூடக முன்கையார்
தொழுது சூழ்வித்தார். 184
220 தெய்வத மடந்தையர்
திருவின் செல்விபால்
இவ்வகை ஒப்பனை
இயற்றி ஏத்தலும்
மைவிரி குவளைநேர்
வடிவக் கண்ணினான்
அவ்விடை செய்திடும்
அமைதி கூறுவாம். 185

221 வேறு

மேலை வானவர்க்
கிறையவன் விரிஞ்சனை
நோக்கி
சாலை யாகிய
தெவ்வெலாத் தேவருஞ்
சார்ந்தார்
மாலை தாழ்முடி
எம்பெரு முதல்வற்கு
மணஞ்செய்
காலை நாடியே
இ·தெனக் கழறுதி 186
யென்றான்.

222 அப்பு ரந்தரன்
மொழிதனை அம்புயன்
வினவிச்
செப்பு கின்றதென்
அறுமுகப் பரன்மணஞ்

செய்தற்
கெப்பெ ரும்பக
லாயினும் இனியதே
எனினும்
ஒப்ப கன்றிடு
முகூர்த்தம்இவ்
வெல்லைஎன்
றுரைத்தான். 187
223 ஈவ தேமுறை யாயுளாய்
இப்பகல் சிறந்த
தாவ தேயெனின்
யான்பெறும்
அணங்கைஈண்
டளிப்பான்
தேவ தேவனாம்
அறுமுகச் செம்மலைக்
கொணரப்

போவ தேகடன்
எமக்கெனப் புரந்தரன்
புகன்றான். 188

224 அனைய காலையில்
அச்சுதக் கடவுளும்
அயனும்
இனிது போதும்என்
றிந்திரன் தன்னொடும்
எழுந்து
முனிவர் யாவருந்
தேவருஞ் சூழ்ந்துமுன்
படரப்
புனித நாயகன் ஆலயம்
நோக்கியே போனார்.
189

225 போந்து மற்றவர்
பொலன்மணிக்

கோயிலுட் புக்குச்
சேந்தன் மாமலர்
அடிகளை முடிகளிற்
சேர்த்திக்
காந்தள் மெல்விரல்
மடந்தைபாற் கடிமணம்
புரிய
ஏந்தல் நீயவண் வந்திட
வேண்டுமென்
றிசைத்தார்.
226 இன்ன வாசகம்
வினவலும் இராறுதோ
ளுடையோன்
அன்ன தாகவென்
றருள்செய்து மடங்கலே
றாற்றும்
பொன்னின் மாமணி

அணையினும்
பொருக்கென எழுந்தான்
துன்னு வீரரும் பாரிட
முதல்வருந் துதிப்ப. 191

227 எழுந்து முன்னுறு
மஞ்ஞையஞ்
சேவல்மேல் ஏறிச்
செழுந்த னிக்கம லத்தய
னாதியாந் தேவர்
விழுந்து முன்பணிந்
தேத்தியே விரைமலர்
மாரி
பொழிந்து பாங்கராய்
வந்திட வீதிவாய்ப்
போந்தான். 192
228 கொற்ற வெண்குடை

எடுத்தனர் குளிர்பனிக்
கவரிக்
கற்றை வீசினர் ஆலவட்
டங்கள்கா லசைத்தார்
ஒற்றை வாட்படை
ஏந்தினர் உடுபதிக்
கடவுள்
மற்றை ஆதவன்
மருத்துவன் சலபதி
மறலி. 193

229 ஆழி மாலயன்
உவணமும் அன்னமும்
அழியா
ஊழி நாயகன் ஊர்தியின்
ஒலிகொலென் றுட்கக்
கேழி லாமலர்க் கிஞ்சுகச்
சூட்டொடுங் கிளர்ந்து

கோழி நீள்கொடி
ஆர்த்ததெவ் வண்டமுங்
குலுங்க. 194

230 வேதர் ஆர்த்தனர்
வேதமும் ஆர்த்தன
விண்ணோர்
மாதர் ஆர்த்தனர் மாதவர்
ஆர்த்தனர் வயவெம்
பூதர் ஆர்த்தனர் பூதமைந்
தார்த்தன புடவி
நாதர் ஆர்த்தனர் நாதமிக்
கார்த்தன நகமே.
195

231 திண்டி பேரிகை
தண்ணுமை சல்லரி
திமிலை
பண்டி யிற்பெயர்

குடமுழாக் காகளம்
படகந்
தொண்ட கந்துடி துந்துபி
வலம்புரித் தொகுதி
அண்டம் விண்டிட
இயம்பினர் பூதரில்
அநேகர். 196

232 அஞ்சி லோதியின்
மேனகை உருப்பசி
அரம்பை
கிஞ்சு கச்செவ்வாய்த்
திலோத்தமை
முதலினோர் கெழுமி
மஞ்ச மீதினும் மானத்தும்
நின்றுவாள் விழிகள்
நஞ்சு மிழ்ந்திட
அமுதெனப் பாடியே

நடித்தார். 197

233 யாணர் வண்டினஞ்
சுரும்புடன் அலமரும்
யாழும்
வீணை யுங்கரம்
பற்றியே விஞ்சையர்
முதலோர்
சேண ரம்பையர்
களிநடத் தோடுசீர்
தூக்கும்
பாணி யும்மிசை வுற்றிட
இசைத்தனர் பாடல்.
198

234 பொருவில் வீரரும்
பூதரும் புரந்தரன்
முதலாஞ்

சுரரும் மாதவர் யாவரும்
பிறருமாய்த் துன்னி
ஒருவர் மெய்யினை
ஒருவர்மெய் நெருக்கவுற்
றிடலால்
தெருவும் முற்றமும்
இடம்பெறா வாயின
சிறிதும். 199

235 வேறு

இன்ன தன்மைகள் இயல
எல்லைதீர்
பொன்னின் வீதிவாய்ப்
போந்து புங்கவர்
மன்னன் ஆற்றிய
மணத்தின் சாலையின்
முன்னவர் வந்தனன்
முடிவில்

முன்னையோன். 200

236 ஆவ தாகிய அண்ணல்
தன்மிசைத்
தாவில் கும்பமேல்
தருப்பை தோய்த்தநீர்
தூவி ஆசிகள் சொற்று
மாதவர்
ஏவ ருந்திரண்
டெதிர்கொண்
டேத்தினார். 201

237 செங்கை தன்னிடைத்
தேவர் மாதவர்
நங்கை மாரெலாம் நாலி
ரண்டெனும்
மங்க லங்களும் மரபின்
ஏந்தியே
எங்கள் நாயகற்

கெதிர்ந்து போற்றினார். 202
238 பஞ்சி தூயநெய் பளித
நாவியாய்
விஞ்சு தீஞ்சுடர்
மிளிர்பொற் றட்டைகள்
அஞ்சில் ஓதியர் அங்கை
ஏந்தியே
செஞ்செவ் வேள்முனஞ்
சிறப்பித் தாரரோ. 203
239 காலை யங்கதிற் காலை
யங்கதிர்
மேலை விண்முகில்
விட்ட கன்றெனக்
கோலஞ் செய்யநங் குமர
நாயகன்
நீல மஞ்ஞைமேல் நின்று
நீங்கினான்.

204

240 ஏய மஞ்ஞைஞநின்
றிழிந்து வேள்விசெய்
கோயில் முன்கடைக்
குமரன் சேர்தலும்
ஆய போழ்தினில்
அரம்பை மாரொடுந்
தூய தோர்ச்சி தொழுதங்
கெய்தினாள். 205

241 எதிர்பு குந்திடும் இந்தி
ராணிதன்
புதிய தோர்பசுப்
பொழிந்த தீயபால்
நிதியின் கொள்கலம்
நிரப்பி வந்துவேள்
பதயு கங்களிற் பரிவொ
டாட்டினாள்.

206

242 ஆட்டித் தீம்பயன்
அலருங் கண்ணியுஞ்
சூட்டி மெல்லடி தொழுது
பல்சுடர்
கூட்டி வைத்ததோர்
கொள்க லந்தனைக்
காட்டி மும்முறை கடவுட்
சுற்றினாள். > 207

243 இனைய தன்மைகள்
இயற்றி இந்திரன்
மனைவி வெள¢கியே
மடமின் னாரொடுந்
தனது மந்திரந் தன்னிற்
போதலும்
அனகன் கண்டதற்
கருள்செய் தேகினான். 208

244 கோல மாமணி குயிற்றிப்
பொன்னரி
மாலை நாற்றியே
வனப்புச் செய்திடுஞ்
சாலை புக்கனன் தனக்கு
வேறொரு
மூல மில்லதோர்
முதலின் வந்துளான். 209

245 வேறு
பக்க மாய்அரி பங்கயன்
ஆதியோர்
தொக்கு வந்திடத்
தொன்மணி மண்டபம்
புக்கு நம்பி புரந்தரன்
உய்த்திடு
மிக்க பீடத்தில் வீற்றிருந்

தானரோ. 210

246 வீற்றி ருந்தபின்
வேதனும் மாயனுந்
தேற்ற மிக்க முனிவருந்
தேவரும்
ஆற்றல் வீரரும்
அண்ணல்தன் ஏவலால்
கூற்ற ஏற்ற இடந்தொறும்
வைகினார். 211

247 அந்த வெல்லை
அவனியில் வாழ்முசு
குந்த னேமுதற்
கொற்றவர் யாவரும்
வந்து வந்து வணங்கி
வழுத்திடக்
கந்தன் எந்தை
கருணைசெய் தானரோ. 212

248 ஆன காலை அரியயன
நாடொணா
ஞான நாயகன்
நங்கையுந் தானுமோர்
மான மேல்கொண்டு
மாயிருஞ் சாரதர்
சேனை சூழ்தரச்
சேணிடைத்
தோன்றினான். 213
249 அம்மை யுந்தன
தத்தனும் வந்து
செம்மல் கண்டு
சிறப்புடை ஓகையாய்
விம்மி தங்கொண்டு
மேதகும் அன்பினால்
இம்மெ னக்கடி
தேயெழுந் தானரோ.

214

250 கண்ண னாதிக் கடவுளர்
யாவரும்
எண்ணி லாமுனி
வோர்களும் எம்பிரான்
நண்ணி னான்இங்கு
நாமுய்ந் தனமெனாத்
துண்ணெ னாவெழுந்
தார்கை தொழுதுளார். 215

251 அனைய காலையில்
ஆதியம் பண்ணவன்
இனிது மானத் திழிந்து
கணத்துடன்
புனித நீடு
பொலன்மணிச்
சாலையுள்
வனிதை யாளொடும்

வந்துபுக் கானரோ. 216

252 வேறு

அதுகண் டுநடந் தறுமா

முகவன்

எதிர்கொண் டுவிரைந்

திருவோர் பதமும்

முதிரன் பொடுதன்

முடிகூ டினனால்

கதிருங் கமலங் களுமே

வியபோல். 217

253 வந்தஞ் சலிசெய்

துவணங்கியதோர்

கந்தன் தனையங்

கவர்கை கொடெடாத்

தந்தம் முரனூடு தழீஇ

முறையே

முந்தன் பொடுயிர்த் 218
தனர்முச் சியையே.

254 முதுவா னவரும்
முனிவோர் எவரும்
மதுசூ தனனும்
மலர்மேல் அயனுஞ்
சதவேள் வியனுஞ்
சகமீன் றவர்தம்
பதமீ மிசைவந் துபணிந்
தனரால். 219

255 தாழ்வுற் றிடுவோர்
உமைசங் கரனைச்
சூழ்வுற் றுவலஞ்
செய்துசூழ் வினையூ
டாழ்வுற் றிடுபுன்
மையகன் றடியேம்
வாழ்வுற் றனமென்

றுவழுத் தினரால். 220
256 உன்னற் கரிதா கியுயிர்க்
குயிராய்
மன்னுற் றவனை
மலைமங் கையுடன்
பொன்னிற் புனையும்
புதுமன் றல்மனை
தன்னிற் குமரன்
கொடுசார்ந் தனனால். 221
257 வேறு
ஆகியதொர்
போழ்துதனில்
ஆணைமுறை தன்னால்
மாகநெறி வந்தொரு
மணித்தவிசு நண்ணத்
தோகையுடை
மஞ்ஞையுறழ்

தோற்றமுடை மாதோ£
பாகமுற வாயிடை 222
பராபரன் இருந்தான்.

258 மங்கையுமை
யுஞ்சிவனும்
வள்ளறனை நோக்கி
இங்குவரு கென்றுபின்
எடுத்தினிது புல்லித்
தங்கள்வயின்
வைத்துநணி தண்ணளி
புரிந்தார்
அங்கது தெரிந்துதொழு
தம்புயன் இசைப்பான். 223

259 முன்னமொரு
வைகல்தனில்மூவிரு
முகத்தோன்
தன்னைஅசு ரப்படை

தடிந்திட விடுத்தாய்
அன்னபரி சேயவுண
ராயுளரை வீட்டி
நென்னல்இமை
யோர்சிறையும்
நீக்கிஅருள் செய்தான். 224
260 நன்றியித னைக்கருதி
நாங்கள்புரி கைம்மா
றொன்றுமிலை
என்னினும் உளத்தெழும்
விருப்பால்
வென்றியசு ரேசர்கிளை
வீட்டுகும ரேசற்
கின்றுமக வான்மகளை
ஈந்திட நினைந்தான். 225
261 அற்றமில் இரக்கமுடன்
ஆருயிர்கள் முற்றும்

நிற்றலும் அளித்தருளும்
நேரிழையும் நீயும்
மற்றிதுப கற்பொழுதில்
வந்தனிர்கள் என்றால்
சிற்றடிய ரேங்கள்செயல்
சீருளதை யன்றோ. 226

262 என்றினைய நான்முகன்
இசைத்திடலும் ஈசன்
நன்றெனெ மகிழ்ச்சிகொடு
நாமுமிது காண்பான்
மன்றல்மலர்
கூந்தல்மலை
மங்கையுடன் இங்ஙன்
சென்றனம் இதற்குரிய
செய்கவினி யென்றான். 227

263 நாதனிவை கூறுதலும்
நன்குமகிழ் வெய்தி

மாதவனும் நான்முகனும்
வாசவனை நோக்கி
வேதமுறை யால்முருகன்
வேட்டருள உன்றன்
கோதைதனை
அன்பொடு
கொணர்ந்திடுதி
யென்றார். 228

264 அந்தவமை யந்தனில்
அதற்கிசைவு கொண்டே
பைந்தொடிநல்
லார்களமர் பாங்கர்தனில்
ஏகி
நந்தமைய ளித்தருளும்
நங்கைவரு கென்னா
இந்திரன்வி ளித்திடலும்
ஏந்திழையெ ழுந்தாள்.

265 கல்லுயர்
பொருப்பினிடை காமரடி
செல்ல
அல்லனகொல்
என்றுமணி நூபுரம்
அரற்ற
மெல்லிடை
வருந்துமென மேகலை
இரங்க
எல்லவரும் உள்மகிழ
எம்மனை நடந்தாள். 230

266 பஞ்சிதனின் மெல்லடி
பனிப்பவரை யின்பால்
குஞ்சரி நடந்தசெயல்
கூறுபுது மைத்தோ

செஞ்சுடர்வை
வேலுடைய செம்மலடி
தீயேன்
நெஞ்சக அடுக்கலினும் 231
நின்றுலவும் என்றால்.
267 தந்திமுன் வளர்ப்பவரு
தையல்மிக நொய்ய
செந்தளிர் ஒதுங்கமிளிர்
சீறடி ஒதுங்கி
இந்திரையும் நாமகளும்
ஏனையரும் ஏத்தப்
புந்திகளி கூ£¢தரு 232
புரந்தரன்முன் வந்தாள்.
268 வேறு
இன்ன வேல்லையில்
இந்திரன் தெய்வதக்
கன்னி தன்னைக்

கடிமணச் சாலையின்
முன்னர் உய்ப்ப
முனிவருந் தேவரும்
அன்னை வாழியென் 233
றேயடி போற்றினார்.

269 கணங்கொள் பேரவை
கைதொழ ஆண்டுறும்
அணங்கு தன்னுடன்
ஆதியந் தேவனை
வணங்கி வேலுடை
வள்ளலை நோக்கியே
கணங்கு சேர்முலை
துண்ணென
வெள¢கினாள். 234

270 மங்கை தாழ்தலும்
வாலிதின் நோக்கியே
அங்கண் நாதன்

அருள்செய
அண்ணலைக்
கொங்கை யாற்குழை
வித்தவள் கோல்வளைச்
செங்கை யோச்சிச் 235
சிறுபுறம் நீவினாள்.
271 திருத்த குந்திறற்
சேவையுஞ் சேண்மிசை
அருத்தி பெற்ற
அணங்கையும் முற்படும்
பெருத்த பொன்மணிப்
பீடிகை மீமிசை
இருத்தி வைத்தனள்
யாவையும் ஈன்றுளாள். 236
272 வேறு
அதிர்கழல் ஈசனொ
டம்மை இருந்தாங்

கெதிரெதிர் விம்பம்
இலங்கி வாபோல்
வதுவை யணிந்திடு
மைந்தனும் மாதுங்
கதிர்மணி தோய்கன
கத்தவி சுற்றார். 237
273 தெய்வத மாதொடு
செங்கதிர் வேலோன்
வெவ்வரி ஏற்றணை
மேவுதல் காணா
வெவ்வெவ ருந்தொழு
தேத்தினர் ஈன்ற
அவ்வையும் அத்தனும்
ஆரருள் செய்தார். 238
274 அண்டர் தமக்கிறை
யாங்கவர் கோலங்
கண்டு புகழ்ந்து

கரந்தொழு துச்சி
கொண்டு மிளிர்ந்து
குளிர்ந்திடு தேறல்
உண்ட சுரும்பினும்
உள்மகிழ் வுற்றான். 239

275 நெஞ்ச மகிழ்ந்த
நெடுந்தகை சொல்லால்
மஞ்சன மாமலர் மற்றுள
முற்றும்
எஞ்சலி லாவகை ஏந்தி
அவைக்கண்
அஞ்சமும் அஞ்ச
வருஞ்சசி வந்தாள். > 240

276 அன்னதொர் காலையில்
அநத்ர நாதன்
பன்னிரு மொய்ம்பு
படைத்திடு புத்தேள்

முன்னர் இருந்து
முறைப்பட அன்னான்
பொன்னடி பூசை
புரிந்திட லுற்றான். 241

277 சொல்லரு நாணொடு
தோகை மடந்தை
நல்லதொர் கன்னல்
நறும்புனல் உய்ப்ப
எல்லவ ரும்புகழ்
இந்திரன் ஐயன்
மெல்லடி பற்றி
விளக்கினன் அம்மா. 242

278 செம்மல் பதங்கள்
செம்புனல் ஆட்டிக்
கைம்மலி யுங்கள
பந்தனை யூட்டி
அம்மலர் சூட்டி

அகிற்புகை காட்டி
நெய்ம்மலி பூஞ்சுடர்
நீட்டினன் அன்றே. 243
279 இவ்வகை பூசை இயற்று
தலோடும்
அவ்வயி ராணி
அயிற்படை யோன்றாள்
செவ்விதின் ஆட்டிய
தீர்த்திகை தன்னைக்
கைவகை யேந்தியொர்
காப்பிடை உய்த்தாள். 244

280 அன்னுழி இந்திரன்
ஆறுமு கேசன்
தன்னொரு கையிடை
தந்தியை நல்கி
நின்னடி யேன்இவண்

நேர்ந்தனன் என்னாக்
கன்னல் உமிழ்ந்த 245
கடிப்புனல் உய்த்தான்.
281 மருத்துவன் மாமறை
மந்திர நீரால்
ஒருத்தி பொருட்டினில்
ஒண்புனல் உய்ப்பக்
கரத்திடை ஏற்றன
னால்கழல் சேர்ந்தார்க்
கருத்திகொள் முத்தியும்
ஆக்கமும் ஈவோன். 246
282 செங்கம லத்திறை
சிந்தையின் ஆற்றி
அங்கையின் ஈந்திட
ஆண்டகை கொண்ட
மங்கல நாணை
மணிக்களம் ஆர்த்து

நங்கை முடிக்கொர்
நறுந்தொடை சூழ்ந்தான். 247
283 மாவொடு வாழை
வருக்கைகொள்
பைங்காய்
தீவிய கன்னல் செறிந்திடு
செந்தேன்
ஆவருள் பாலிவை
அண்டர்கள் செம்மல்
மூவிரு மாமுக னைநுகர்
வித்தான். 248
284 வார்த்தொகை சூழ்தரு
மத்தளி தக்கை
பேர்த்த வலம்புரி பேரி
கலித்த
ஆர்த்தனர் வீரர்
அருங்கண நாதர்

தீர்த்தனை வந்தனை
செய்து களித்தார். 249

285 தண்டுளை வண்ணல்
சரோருக மேலோன்
எண்டிசை பாலகர்
இந்திரன் என்போன்
அண்டர்கள் ஏனையர்
ஆங்கவர் கோலங்
கண்டு சிறந்தது கட்புல 250
மென்றார்.

286 ஆயது போழ்தினில்
அம்புய முற்றோன்
காயெரி தந்து
கலப்பைகள் கூவித்
தூயம ணம்புரி
தொன்முறை வேள்வி

நாயக னைக்கொடு 251
நன்றுசெய் வித்தான்.
287 உலகருள் காரணன்
ஒண்ணுத லோடும்
வலமுறை யாக
வயங்கனல் சூழ்ந்து
சிலையிடை யன்னவள்
சீறடி தந்தான்
மலரயன் உச்சியின்
மேலடி வைத்தான்.
252

288 மாலினி காளிகள் மாமல
ராட்டி
பாலின் நிறத்தி பராயினர்
சூழச்
சாலினி மங்கலை
தன்னொடு கண்டான்

வேலினின் மாவினை 253
வீழ எறிந்தோன்.

289 இவ்வகை மன்றல்
இயற்றிய பின்னைத்
தெய்வத மாதொடு
செங்கதிர் வேலோன்
அவ்வை யொடத்தனை
அன்பொடு சூழ்ந்து
வெவ்விதின் மும்முறை
சேவடி தாழ்ந்தான். 254

290 வேறு

அடித்த லத்தில்வீழ்
மக்களை இருவரும்
ஆர்வத்
தெடுத்த ணைத்தருள்
செய்துதம் பாங்கல்
இருத்தி

முடித்த லத்தினில்
உயிர்த்துமக் கெம்முறு
முதன்மை
கொடுத்தும் என்றனர்
உவகையால் மிக்ககொள்
கையினார். 255

291 மலைம டந்தையும்
இறைவனும் மைந்தற்கு
மகட்குந்
தலைமை செய்தருள்
புரிதலுஞ் சாலையுள்
இருந்த
அலர வன்முதல்
அமரரும் முனிவரும்
அணங்கின்
குலம டங்கலும் அவரடி
முடிமிசைக் கொண்டார். 256

292 அறுமு கன்றனை
அணங்கினை
அவையுளோர் எவரும்
முறையில் வந்தனை
செய்தலும் முழுதருள்
புரிந்து
கறையி ளங்கிய
கண்டனுங் கவுரியுங்
கடிதின்
மறைத லுற்றனர் பரிசனந்
தன்னொடு மன்னோ. 257
293 மறைந்த காலையில்
விம்மித ராய்மணச்
சாலை
உறைந்த தேவரும்
முனிவரும் உயிர்களுக்
குயிராய்

நிறைந்த மேலையோர்
நிலைமையை
நினைந்துதம் வாயால்
அறைந்து கைதொழு
தவர்பெயர் எடுத்தெடுத்
தார்த்தார். 258

294 வரைப டைத்தவர்
மறைந்துழி வானவர்
பலரும்
நிரைப டைத்துள
முனிவருங் கவன்றது
நீத்தார்
திரைப டைத்துள
ஆழ்கடற் பட்டுளோர்
சிறந்த
கரைப டைத்தென
அணங்கொடு குமரனைக்

கண்டு.
259

295 உமையும் ஈசனும்
இருந்திடு பீடிகை
உம்பர்க்
குமர நாயகன் தெய்வதக்
களிற்றொடுங் கூடி
அமர அன்னது
காண்டலும் மகிழ்சிறந்
தன்னார்
கமல மெல்லடி
தொழுதனர் வழுத்தினர்
களிப்பால். 260
296 இனைய காலையில்
அரியணைப் பீடநின்
றிழியா
அனைவ ருந்தொழு

துடன்வர ஆறுமா
முகத்துப்
புனித நாயகன் மங்கல
இசையொடும் போந்து
தனது கோயிலுட்
புக்கனன் இறைவியுந் 261
தானும்.
297 வேலை யன்னதில்
குமரவேள் வேள்விநா
யகற்கு
மால யன்முதல்
அமரர்க்கும் மற்றுளார்
தமக்கும்
ஏல வேவிடை தந்துதன்
பரிசனம் எவையும்
ஆல யந்தனிற்
கடைமுறை போற்றுமா

றளித்தான். 262
298 இன்ன தன்மைய தாகவே
எம்மையீன் றெடுத்த
அன்னை தன்னுடன்
அறுமுகன் உறையுளின்
அடைந்து
பொன்னின் மஞ்சமேற்
படுத்துமெல் லமளியிற்*
புவனம்
மன்று யிர்த்தொகை
யுய்ந்திட முயங்கிவை
கினனால்.
( * "அவனன்றி
ஓரணுவும் அசையாது"
என்னும் பழமொழி
இங்கு உன்னற்பாலது.) 263
299 சேணு தித்திடு தெய்வதக்

களிற்றினைச் செவ்வேள்
நாணி னிற்கட்டி
நகரிடைத் தந்துநற்
கலன்கள்
பூணு தற்றுறும் அங்குசங்
கைக்கொடு புயமாந்
தூணு றப்பிணித்
தணைத்தனன்
அருளெனுந் தொடரால். 264

300 மருந்து போல்மொழிக்
குமரியுங் குமரனும்
மணந்தாங்
கிருந்த வெல்லையில்
விரிஞ்சனும் மாலும்
ஏனையரும்
விரைந்து தத்தமக்
கியன்றதொல்

லிருக்கையின் மேவப்
புரந்த ரன்பரி சனரொடுந்
தன்மனை புக்கான்.
265

301 முகிலு யர்த்தவன்
முசுகுந்த னேமுதல்
உள்ள
அகில மன்னர்க்குந்
தேனுவின் பலபயன்
அருத்தித்
துகிலும் ஆரமும்
அணிகளும் இருநிதித்
தொகையும்
விகல மின்றியே
கொடுத்தனன் யாரையும்
விடுத்தான். 266

302 எல்லை யன்னதின்

முசுகுந்த னாதியாம்
இறைவர்
கல்ல கந்தனில்
இழிந்துதஞ் சேனையின்
கடலை
ஒல்லை கூடியே
வேறுபல் புலந்தொறும்
ஒருவித்
தொல்லை யூர்புகுந்
திருந்தனர் வீடுறுந்
தொடர்பால். 267

303 மன்னர் யாவரும்
விடைகொடு போதலும்
மகவான்
தன்ன தாகிய கடிமனைக்
கிழத்தியுந் தானும்
இன்னல் தீர்தரு போகம

தாற்றினன் இருந்தான்
அன்ன பான்மையிற்
சில்பகல் அகன்றன 268
அன்றே.

ஆகத் திருவிருத்தம் - 303

-------

## **3.** விண்குடியேற்று படலம் **(304 - 349)**

304 ஆன சிற்சில
வைகல்சென் றிடுதலும்
அணங்குந்
தானும் உற்றிடும்
உறையுளை ஒருபகல்
தணந்து

வான வா¢க்கிறை
வினைக்குறை நிரப்புதல்
வலித்துக்
கோன கர்ப்பெரும்
புதவினில் வந்தனன்
குமரன். 1 1
305 உவாவின் மாதுடன்
உவாவினுக் கிளையவன்
உவாவில்
திவாக ரன்மதி யாமென
வருதலும் தெரிந்து
தவாத அன்புடை
வயவருஞ் சாரதர்
எவரும்
அவாவொ டன்னவர்
அடிமுறை வணங்கிநின்
றார்த்தார்.

2

306 அனிகம் ஆர்த்திடல்
செவிப்புலம் படா¢தலும்
அடல்வேல்
புனித நாயகன்
போந்தனன் போந்தனன்
என்று
வனச மேலவன்
மாலவன் மகபதி
வானோர்
முனிவர் யாவரும்
எழுந்தனர் விரைசெலல்
முன்னி.

3

307 வேறு
எழுதரு கின்றவர் யாரும்
ஓரிமைப்

பொழுதுறும்
அளவையிற் போந்து
மன்னுயிர்
முழுதருள் புரிதரு
முதல்வன் சேவடி
தொழுதனர்
இறைஞ்சினர் சூழ்ந்து
போற்றலும். 4

308 கொந்தவிழ் அலங்கலங்
குவவுத் தோளினான்
வந்துவந் தனைபுரி
வதனை நோக்கியே
நந்தனி யூர்தியை
நடாத்திச் செல்கெனச்
சிந்தையில் விரைதரு
தேர்கொண் டேகினான். 5

309 ஆசுகன் உய்த்திடும்

அம்பொற் றேர்மிசை
வாசவன் அருள்புரி
மடந்தை தன்னுடன்
தேசுடை அறுமுகச்
செம்மல் கண்ணுதல்
ஈசனுங் கவுரியும் என்ன
எய்தினான். 6
310 வேறு
சூரி னோடு துனைபரித்
தேர்மிசைச்
சூரி னோடு
துணைவன்வந்
தெய்தலும்
வாரி வீசினார் மாமலர்
பன்முறை
வாரி வீசினர் வானவர்
யாருமே. 7

311 பூத வீரரும் போர்ப்படை
மள்ளரும்
மூது ணர்ந்த முனிவன்
சிறார்களுங்
கோதை வேலுடைக்
கொற்றவற் காம்பணி
ஏதும் ஆற்றி இனிதயற்
சுற்றினார். 8

312 மாகர் யாரும் வணங்க
அவரவர்
சேக ரத்தினிற் சேவடி
சூட்டியே
தோகை மாமயில்
தோன்றல்முன் நின்றதால்
ஆகை யால்தவம்
ஆற்றலதே அன்றோ. 9

313 பூவி னன்முதற் புங்கவர்
யாரையும்
மூவி ரண்டு முகத்தவன்
கண்ணுறீஇ
நீவிர் எல்லிரும்
நேர்ந்தநும் ஊர்தியின்
மேவி யெம்மொடு
செல்லுமின் 10
விண்ணென்றான்.
314 என்ன லோடும்
இனிதென நான்முகன்
அன்ன மீதினும் அச்சுதப்
பண்ணவன்
பன்ன கேசன்
பகைஞன்றன் மீதினும்
முன்னர் ஏறி
முதல்வனை எய்தினான். 11

315 மாறில் வெள¢ளி
மலைப்படு தெண்கயத்
தூறு நீத்தத் தொழுக்கென
மும்மதத்
தாறு பாயும் அடல்அவி
ராவதத்
தேறி வந்தனன் இந்திரன்
என்பவன். 12

316 மற்று நின்றுள வானவர்
யாவரும்
முற்று ணர்ந்த முனிவருந்
தத்தமக்
குற்ற வூர்திகள்
ஊர்ந்தெம் மிறைவனைச்
சுற்றி நின்று துதித்துடன்
மேயினார். > 13

317 வள்ளல் இத்துணை
வானுல கத்திடைப்
பொள்ளெ னப்புகப்
போதுகின் றானெனாக்
கொள்ளை யிற்பலர்
கூறலுங் கூளியின்
வெள¢ள முற்றும் 14
விரைந்தெழுந் திட்டவே.
318 குடகு ழாப்பணை
கொக்கரை தண்ணுமை
படக மாதிய பல்லியம்
ஆற்றியே
புடைநெ ருங்கிய பூதரில்
எண்ணிலார்
இடிமு ழங்கிய தென்ன
இயம்பினார். 15
319 ஈங்கித் தன்மையின்

ஈண்டு பரிசனம்
பாங்குற் றேகப்
பரஞ்சுடர்ப் பண்ணவன்
ஓங்கற் கொண்ட
ஒருதனிக் கோநகர்
நீங்கிச் சேணின்
நெடுநெறிப்
போயினான். 16

அந்த ரத்தில் அமருல
கந்தனைக்
கந்த னங்கொரு
கன்னலின் நீங்கியே
இந்தி ரப்பெயர் எய்திய
மாதுலன்
முந்தி ருந்த முதுநகர்
மேவினான. 17

321 வேறு
விண்டொடர் பொன்னகர்
மேலைச் சூர்மகன்
நுண்டுகள் செய்திட
நொய்தின் உற்றதும்
அண்டர்கள் இறையவன்
அகங்கொள்
வேட்கையும்
கண்டனன் குமரவேள் 18
கருணை யாழியான்.
322 வீக்குறு கனைகழல்
விமல நாயகன்
ஆக்கமில் விண்ணுல
களிக்கும் பெற்றியால்
தேக்கிய விஞ்சையின்
தெய்வத் தச்சனை
நோக்கினன் இனையன 19

நுவறன் மேயினான்.
323 செல்லலை யகன்றிடு
தேவர் மன்னவன்
எல்லையில்
வளனொடும் இருக்கும்
பான்மையால்
தொல்லைய தாமெனத்
துறக்க நல்குதி
வல்லையில் என்றலும்
வணங்கிப் போயினான். 20
324 வேறு
நூறெ ரிந்திடு
நோன்மையோன்,
மாறில் பொன்னகர்
மாடுற
வீறு மாமதில்
விண்ணுலாம், ஆறு பாய

அமைத்தனன். 21

325 ஆயி ரம்மலர் அம்புயன்,
சேய வாய்கள் திறந்தென
ஞாயில் மாமதில்
நள்ளுற, வாயில் நான்கு
வகுத்தனன். 22

326 நாற்றி சைக்கண நாதரும்,
ஆற்ற வேயரி தாமென
ஏற்ற கோபுரம் ஏழ்நிலை,
வீற்று வீற்று விதித்தனன். 23

327 வண்ண மாமதில்
வைப்பினுள், அண்ண
லங்கிரி யாழிசூழ்
கண்ண கன்புவிக்
காட்சிபோல், எண்ணில்
வீதி இயற்றினான். 24

328 பூவின் மேல்வரு
புங்கவத், தேவு நாணுறு
செய்கையில்
காவல் மாநக ரத்திடைக்,
கோவில் ஒன்று
குறிற்றினான். 25

329 தேவு காமுறு செய்வரை,
காவி மல்கு கயத்தொடு
வாவி பொய்கை
வரம்பில, ஒவில்
பான்மையின்
உதவினான். 26
330 மாட மாளிகை
மண்டபம், ஈடு சேரரி
ஏற்றணை
பாடு சேர்தரு பாழிகள்,

நாடி ஏர்தக நல்கினான். 271

331 வேறு

ஏறுசீர் இந்திரன்
இருக்குங் கோயிலும்
ஆறுமா முகப்பிரான்
அமருங் கோட்டமும்
மாறிலா மாலயன் மந்தி
ரங்களும்
வேறுளார் இருக்கையும்
விதித்திட் டானரோ. 28

332 கூன்முக வால்வளைக்
குரிசில் ஊ£¤னும்
நான்முகன் ஊரினும்
நலத்த தென்றிட
வான்முக வியனகர்
வளமை சான்றிட
நூன்முக நாடியே

நுனித்து நல்கினான். 29
333 வேறு
பொன்னி னுக்குப்
புகலிட மாகவான்
மன்னி னுக்குச்செய்
மாநகர் வண்மையை
என்னி னுக்கும்
இயம்பவற் றோகலை
மின்னி னுக்கும்
விதிப்பருந் தன்மையே. 30

334 இனைத்தி யாவும்
இமைப்பிடைச்
சிந்தையின்
நினைப்பிற் செய்த
நிலைமையை
நோக்கியே

நனைத்து ழாய்முடி
நாரணன் நான்முகன்
மனத்தி னூடு
மகிழ்ச்சியை மேவினார். 31

335 வல்லை வேதன்
வகுப்பது மற்றுனக்
கில்லை நேரென் றினிது
புகழ்ந்திட
அல்லல் தீர்அம
ரர்க்கிறை காண்குறீஇப்
புல்லி னான்அப்
புனைவனை என்பவே. 32

336 அணங்கு சால்புரம்
அவ்வகை நல்கியே
நுணங்கு நூலவன்
சண்முகன் நோன்கழல்
வணங்கி நிற்பவ

ருள்செய்து மாடுறு
கணங்க ளோடு
கதுமெனப் போயினான். 33
337 அன்ன காலை
அரம்பைய ரோடொரு
பொன்னின் மானம்
புகுந்து புலோமசை
கன்னல் ஒன்றினில்
காமரு பொன்னகர்
மன்னன் மந்திரம்
வந்தடைந் தாளரோ. 34
338 அடையும் எல்லை
அறுமுகப் பண்ணவன்
இடைநி லைப்படும்
இந்திரன் கோநகர்க்
கடைமு தற்செலக்
கஞ்சனை யாதியோர்

உடைய தத்தம துார்தியின்
நீங்கினார்.
35

339 அக்க ணந்தனில்
அண்டர்கள் யாவரும்
தொக்கு டன்வரத்
தோகையன் னாளுடன்
செக்கர் மாமணித்
தேரினுந் தீர்ந்தொராய்ப்
புக்கு மேயினன்
பொன்புனை மன்றமே.
36

340 வேறு
தன்றுணை மஞ்ஞை
யாகித் தாங்குதல்
தெரிந்தி யானும்
இன்றிவற் பரிப்பன்

என்னா இளவலும்
அமைந்த தென்ன
மன்றிடை இருந்த
தெய்வ மடங்கலந்
தவிசின் உம்பர்
வென்றியந் தனிவேல்
அண்ணல் வீற்றிருந் 37
தருளி னானே.
341 அன்னதோர் அளவை
தன்னில் அறுமுகன்
அலரிற் புத்தேள்
முன்னவர் தம்மை
எல்லாம் முழுதருள்
புரிந்து நோக்கி
இந்நகா¢ அரசு போற்ற
இமையவர் இறைவற்
கின்னே

பொன்னணி மவுலி
பொள்ளெனப் புனைதி
ரென்றான். 38

342 என்றிவை குமரன் கூற
இனிதென இசைவு
கொள்ளா
அன்றொரு கணத்தின்
முன்னர் அட்டமங்
கலமுந் தந்து
மன்றல்கொள் கவரி
ஒள¢வாள் மணிமுடி
கவிகை யோடு
நின்றுள உறுப்பும்
ஏனைப் பொருள்களும்
நெறியின் உய்த்தார். 39

343 அரசியல் உரிமைத்
தெல்லாம் ஆங்கவர்

அழைத்துக் கங்கைத்
திரைசெறி தெண்ணீர்
ஆட்டிச் செழுந்துகில்
கலன்கள் சாந்தம்
விரைசெய்தார் புனைந்து
சீய வியன்பெருந்
தவிசின் ஏற்றி
வரிசையோ டிந்திரற்கு
மணிமுடி சூட்டி னாரால்.

344 சுடர்த்தனி மவுலி
தன்னைச் சூட்டலுந்
துறக்கத் தண்ணல்
அடித்துணை பணிந்தார்
வானோர் அனைவரும்
ஆசி தன்னை
எடுத்தெடுத் தியம்ப
லுற்றார் இருடிகள்

அரம்பை மாதர்
நடித்தனர் விஞ்சை
வேந்தர் நல்லியாழ்
நவின்றி சைத்தார். 41

345 இந்திரன் அனைய
காலை எம்பிரான்
முன்னர் ஏகி
வந்தனை புரிந்து போற்றி
வளமலி துறக்க நாடு
முந்துள அரசுஞ் சீரும்
முழுதொருங் களித்தி
எந்தாய்
உய்ந்தனன் இதன்மேல்
உண்டோ ஊதியம்
ஒருவர்க் கென்றான்.
42

346 என்றலும் அருள்செய்

தண்ணல் இந்நகர் அரசு
போற்றி
நன்றிவண் இருத்தி
என்னா நாகர்கோன்
தன்னை வைத்து
நின்றுள அமரர் தம்மை
நிலைப்படும் இருக்கைக்
கேவித்
தன்துணை அணங்குந்
தானுந் தன்பெருங்
கோயில் போந்தான். 43

347 குறினெடில் அளவு
சான்ற கூளியும் வயவர்
யாரும்
வறியதோ ரணுவுஞ்
செல்லா மரபினால்
வாயில் போற்ற

உறையுளின் இருக்கை
நண்ணி ஒருபெருந்
தலைவி யோடும்
அறுமுக வள்ளல் பல்வே
றாடல்செய் திருந்தான்
அன்றே. 44

348 தூவியந் தோகை
மேலோன் துணைவியோ
டிருந்த காலைப்
பூவினன் முதலோர்
தத்தம் புக்கிடம்
அமர்ந்தா£ அன்றே
தேவர்கள் இறைவன்
தானுஞ் சேயிழை சசியு
மாக
மேவினன் இன்பந்
துய்த்து விண்ணுல கரசு

செய்தான். 45

349 இனைத்தியல் கின்ற
எல்லை இந்திர வளனே
அன்றி
அனைத்துல கத்து முள்ள
ஆக்கமும் தாம்பெற்
றென்ன
மனத்திடை உவகை
கொண்டு மாநகர்
இருக்கை புக்குத்
தனித்தனி அமரர்
எல்லாஞ் சாறயர்ந் தமர்த
லுற்றார்.
46

ஆகத் திருவிருத்தம் - 349

----------

# **4.** கந்த வெற்புறு படலம் **(350 - 355 )**

350 இப்படி சிலநாள் ஏக
இதன்மிசை வைகல்
ஒன்றில்
இப்பருங் கந்த வெற்பில்
உறைவது கருதிச்
செவ்வேள்
செப்புறழ் கொங்கை
யோடுஞ் சினகரந் தணந்து
செல்ல
அப்பரி சுணர்ந்து வேதா
ஆதியர் யாரும் போந்தார். 1
351 பெருந்தகை யனைய
காலைப் பிரமன்மால்
முதலோர் யாரும்

விரைந்துதம் பதங்கள்
செல்ல விடைபுரிந் தங்கண்
வானத்
திருந்தர சியற்ற
விண்ணோர்க் கிறைவனை
நிறுவித் தெய்வத்
திருந்திழை அணங்கி
னோடுஞ் சென்றுதன் தேரிற் 2
புக்கான்.
352 தேரிடைப் புகுந்த ஐயன்
திறலுடை மொய்ம்பன்
பாகாய்ப்
பாரிடைச் சென்று
முட்கோல் பற்றினன்
பணியா லுய்ப்பப்
போருடைச் சிலைவல்
லோரும் பூதா¢தங் கடலுஞ்

சுற்றக்
காருடைக் களத்துப் புத்தேள்
கயிலைமால் வரையிற்
போந்தான். 3

353 போனதோர் காலை வையம்
பொள்ளென இழிந்து
முக்கண்
வானவன் தன்னை ஆயோ
டடிகளை வணக்கஞ் செய்து
மேனதோர் கருணை
யோடும் விடைபெறீஇ
விண்ணு ளோர்கள்
சேனையந் தலைவன் கந்தச்
சிலம்பினிற் கோவில்
புக்கான். 4

354 புக்கதோர் குமர மூர்த்தி
பொருதிறல் வயவர் யாருந்

தொக்கனர் பணியில் நிற்பத்
தொல்படைக் கணங்கள்
போற்ற
மைக்கருங் குவளை
ஒண்கண் மடவர லோடு
மேவி
மிக்குயர் மணிப்பீ டத்தில்
வீற்றிருந் தருளி னானே. 5

3551 *துய்யதோர் மறைக
ளாலுந் துதித்திடற் கரிய
செவ்வேள்
செய்யபே ரடிகள் வாழ்க
சேவலும் மயிலும் வாழ்க
வெய்யசூர் மார்பு கீண்ட
வேற்படை வாழ்க
அன்னான்
பொய்யில்சீ ரடியார் வாழ்க

வாழகஇப் புவன
மெல்லாம்.
(பா-ம் 1" துய்யதா
மறைகளாலுந் துதித்திட
அரிய தான
செய்யவேள் அடிகள்
வாழ்க.)
6

ஆகத் திருவிருத்தம் - 355
------

## **5.** இந்திரபுரிப் படலம் **(356 - 421)**

356 காசினி வியத்தகு கந்த
வெற்பிடைத்
தேசுடை முருக§விசேர்ந்த

செய்கையைப்
பேசினன் இங்கினிப்
பிறங்கு பொன்னகர்
வாசவன் இயற்கையும்
மற்றுங் கூறுகேன். 1

357 துண்ணென அவுணரைத்
தொலைத்த வேற்படைப்
பண்ணவன் அருளினால்
பலரும் போற்றிட
விண்ணர சியற்றிய
வேந்தன் ஓர்பகல்
எண்ணினன் உளந்தனில்
இனைய நீரதே. 2

358 பற்றலர் சிறுதொழில்
பலவு மாற்றியே
உற்றதும் அளப்பிலா
உகமொ ளித்தது

மற்றதன் இடையிடை
வந்த தீமையும்
பெற்றிடு துன்பமும்
பிறவும் உன்னினான். 3
359 மறுத்தனன் சசியுடன்
வைகும் வாழ்க்கையை
வெறுத்தனன்
வெறுக்கையை வேந்தியற்
கையுஞ்
செறுத்தனன் தவத்தினாற்
சேர்வன் வீடெனாத்
துறத்தலை உன்னினன்
துறக்க மேயினான். 4
360 இந்திரன் இயற்கையை
எண்ணி வானவர்
மந்திரி யாகியும் மன்ன
னாகியும்

அந்தண னாகியும் அமரும்
பொன்னவன்
புந்தியில் ஈதொரு
புணா¢ப்பை உன்னினான். 5
361 உன்னிய மேலவன் உம்ப
ருக்கெலாம்
மன்னவ னுழைதனில்
வந்து வைகியே
கொன்னவில் வச்சிரங்
கொண்ட பாணியாய்
இன்னன கேளென
இயம்பல் மேயினான். 6
362 புன்றொழி லாகிய
பொய்யும் வாய்மையாம்
ஒன்றொரு பெரும்பயன்
உதவு மாயிடின்*
என்றனர் சுரகுரு இந்தி

ரன்பதம்
நின்றிட ஈதொரு நிகழ்ச்சி
கூறுவான்.
( * 'பொய்ம்மையும்
வாய்மை இடத்த
புரைதீர்ந்த, நன்மை
பயக்கு
மெனின்' என்னும்
திருக்குறள் கருத்தினை
இங்கு ஒப்பு நோக்குக.) 7
363 வேறு
அன்பு நீங்கிய அவுணருக்
கரசனாற் பட்ட
துன்ப மானதை உன்னியே
துறக்கமேல் அரசும்
இன்ப வாழ்க்கையும்
வெறுத்தனை

இவைவெறுத் தனையேல்
பின்பு தோற்றுநீ
ஆற்றலால் பெறும்பயன் 8
யாதோ.
364 சிந்தை வெந்துயர்
உழந்தவ ரல்லரோ
திருவும்
அந்த மில்பெரு
வாழக்கையும் எய்துவர்
அதுதான்
மைந்த வாழிகேள்
நின்னள வன்றுகாண்
மதிக்கின்
இந்த மூவுல கந்தனில்
வழங்கிய இயற்கை. 9
365 ஒவ ருந்தவம் இயற்றிய
முனிவரில் உலகத்

தேவர் தங்களில் பாதலத்
தோர்களிற் சிறந்த
மூவ ரென்றுபேர் பெற்றிடு
முதல்வர்கள் தம்மில்
ஏவர் மங்கையர்
முலைத்தலைப்
போகம்விட் டிருந்தோர். 10
366 போன துன்பினுக்
கஞ்சியே புகுந்தவித்
திருவை
ஊன மாமெனத் துறந்துநீ
தமியைதோற் றுழலின்
ஆன போதுறுந் துயரினுக்
கவதியும் உண்டோ
கானல் நீந்திட வெருவியே
கடல்புக வற்றோ.
11

367 ஆக நோவுற வருத்தியே
ஐம்புலன் அவித்து
மோக மாதியாம் மூவிரு
குற்றமும் முருக்கி
யோகு செய்திடும்
மேலையோர்
பெறும்பயன் உரைக்கில்
போக மன்றிஒன்
றில்லைகாண் எல்லைதீர் 12
புகழோய்.

368 காண்ட கும்புலன்
ஒடுங்குமாங் கரணமும்
இலையாம்
பூண்ட செய்கையும்
ஒழியுமா மியாக்கையும்
போமாம்
ஆண்டொர் பேரின்பம்

உண்டென்பர் அதனையார்
அறிந்தார்
ஈண்டு கண்டதே
மெய்யென்பர் உலகுளோர்
யாரும். 13

369 பொய்ம்மை உற்றிடு
கானலைப் புனலென
விரும்பிக்
கைம்மிசைக் கொண்ட
அமிர்தினைக் கமருகுத்
தாங்கு
மெய்ம்மை யிற்சிலர்
உண்டெனும் வீடுபே
றுன்னி
இம்மை யிற்பயன்
இழக்குதி நன்றுநின்
எண்ணம்.

14

370 மங்கை மார்இடத்
தின்பமே இன்பமற்
றவரோ
டிங்கு வாழ்வுறும்
வாழ்க்கையே இயல்புறும்
வாழக்கை
அங்க வர்ப்பெறு
செல்வமே செல்வம்ஆங்
கவர்தங்
கொங்கை புல்குறா
வறுமையே கொடியதோர்
வறுமை. 15

371 மறுவி லாதவாள் மதிமுக
மடந்தையர் புணர்ப்பைச்
சிறிய இன்ப மென்றுரை

செய்வர் அன்னதன்
சிறப்பை
அறிவ ரேயெனின்
ஆங்கதே பேரின்ப மாகும்
இறைவ நீயது கேட்டியேல் 16
மொழிகுவன் என்றான்.

372 ஏமஞ் சான்றிடு குரவன்மற்
றிவையிவை இசைப்ப
நாமஞ் சாற்றிடு குலிசமாப்
படையினன் நகையா
ஓமஞ் சான்றிடு தீமுன்னர்
இழுதென உடைந்து
காமஞ் சான்றிடும்
உளத்தனாய் இனையன
கழறும். 17

373 பொருந்து மாசினை
அகற்றிநற் காட்சியைப்

புரியும்
மருந்து போலுறு குரவநீ
மடந்தையர் சிறப்புந்
திருந்து காமநல்
லின்பமும் எனக்கருள்
செய்யா
திருந்த காரண
மென்கொலோ இன்றுகா 18
றென்றான்.

374 வேறு
வெற்றுட லத்தில்
விழித்தொகை பெற்ற
சிற்றறி வோன்இவை
செப்புத லோடும்
மற்றிவண் உள்ளம்
மயங்கினன் என்னாக்
கற்றுணர் மந்திரி கட்டுரை 19

செய்வான்.

375 மாதர்கள் மேன்மைகள்
மன்மத நன்னூல்
ஓதிடும் உண்மையை
ஓர்ந்துணர் கின்ற
காதல் இலாவழி கட்டுரை
செய்யார்
ஆதலின் ஐய
அறைந்திலன் இந்நாள்.

376 கோண்மதி யேகுடை
யாவரு கோன்தன்
மாண்மதி நூலெனும்
வான்கடன் முற்றும்
நீண்மதி யால்உணர்ந்
தேன்அதன் நீர்மை
கேண்மதி யென்று
கிளர்த்திடு கின்றான்.

21

377 ஈறில வென்றும்
இயம்பினர் பத்தே
நூறுடன் எட்டெனும்
நூலும் நுவன்றார்
வேறும் இசைத்தனர்
மெய்ச்சம யந்தான்
ஆறென ஓதினர்
ஆங்கவை தம்முள். 22

378 சுதையமு தேயெனத்
துய்த்திடு நீரார்க்
கிதமிக நல்குவ
திம்மையின் முத்திக்
கதியருள் கிற்பது காமல்
உலோகா
யதமென வேநெறி
யொன்றுள தன்றே. 23

379 அச்சம யத்தலை
யாற்றிடை நின்றே
எச்சமில் வீடுபெற் றின்புறு
கின்றோர்
மெச்சியல் ஆடவர்
மேலதை ஈவோர்
நச்சுறு கூ£¢விழி நா£¤யர்
தாமே.
24

380 அம்மட வார்இய
லானவும் அன்னோர்
தம்மை அடைந்திடு
தன்மையும் மேவுஞ்
செம்மைகொ ளாடவர்
செய்கையும் எல்லாம்
மெய்மைய தாக
விளம்பிடும் வேள்நூல். 25

381 சாதி இயற்கைகள்
தத்துவம் மாந்தர்
தீதில் கணத்தொடு தேசம்
அவத்தை
போது கருத்திவை ஆதிய
போர்வேள்
வேதம் உரைக்கும்
விழுப்பொருள் மாதோ. 26
382 வசைதவிர் மாலினி
மால்வட வைப்பேர்
இசையினி அத்தினி
ஏந்திழை யோர்க்காம்
அசைவறு தொல்மர
பாடவர் யார்க்குஞ்
சசன்இட பன்அசு
வன்இவை தாமே. 27
383 முன்னம் உரைத்திடும்

மும்மர புக்குட்
கன்னியர் ஆடவர் காமர்
குறிக்கு
மன்னி ஆழமும் நீளமும்
முற்றும்
இன்னன வென்றிட ஏற்ப 28
தியற்கை.
384 அந்தமில் தேவர்
அருந்தவர்நாகர்
கந்தரு வத்தர் கணங்கெழு
பூதர்
முந்தும் அரக்கர் இயக்கா¢
முரட்பேய்
தந்திறன் ஆவது தத்துவ
மாமே.
29
385 எண்மைகொள் தத்துவ

யாற்றிடை நின்ற
பெண்மைய ரைவளி
பித்தென ஓதும்
வண்மைகொள் முக்குணம்
மன்னினர் மற்றவ்
வுண்மை படைத்திடல் 30
ஒண்குண னாமே.

386 வேறு

உருவும் வண்ணமும்
ஓங்கும் செயற்கையும்
அரிவை மார்கள்தம்
நாளும் தனையவுந்
தெரிய நாடித் தெளிந்தறி
கிற்பரால்
மரபு தான்முதல்
வன்குணத் தீறுமே. 31

387 ஏறு தேசந்தொ றீண்டிய

மாதர்தம்
ஊறும் நீதியும் உள்ளமுஞ்
செய்கையும்
வேறு வேறு வினவியெல்
லோர்களுந்
தேற நிற்பது தேச
இயற்கையே. 32

388 தரித்த வாலை தருணை
பிரவுடை
விருத்தை யாகும்
வியன்பரு வங்களின்
உரைத்த காலமும்
உள்ளத்தின் வேட்கையும்
பிரித்த றிந்திடப் பெற்றத
வத்தையே. 33

389 கோல மாம்முக்
குணத்தர்முப் பான்மையர்

நால்வர் எண்மராம்
நாரியர் பற்றுற
ஏவலும் ஆடவர் எய்துதற்
கேற்றபல்
கால முந்தெரி கிற்பது
காலமே. 34

390 மக்கள் காமம் வடிவினில்
வைகலும்
பக்கந் தோறும் இழிந்துயர்
பான்மையால்
புக்க தோரிடை நாடிப்
புரையொரீஇத்
தக்க செய்வதுஞ் சாற்றிய
மேலதே. 35

391 பற்று ளோரையும் பற்றிலர்
தம்மையும்

முற்று ளோரையும்
முற்றிலர் தம்மையும்
மற்று ளோரையும்
மாந்தர்கள் தேற்றமு£ல்
துற்ற செய்கை 36
உளங்கொள் கருத்ததே.
392 வேறு
இங்கிவை ஆடவர்
இயல்புஞ் சால்புறு
மங்கையர் பான்மையும்
வகுத்த தன்னவர்
பொங்கிய புணர்வகை
புணர்ச்சிக் கேற்பதோர்
அங்கிதம் பிறவுமேல்
அறைய நின்றவே. 37
393 புல்லுதல் சுவைத்திடல்
புணர்ந கக்குறி

பல்லுறல் மத்தனம்
பயிலுந் தாடனம்
ஒல்லொலி காணமோ
டுவகை ஆதிய
எல்லையில் புணர்நிலைக்
கியைநத என்பவே. 38

394 வேறு
விரைதலே சமந்தூக்
கென்னும் வேகமும்
உச்சம் நீசம்
புரைதவிர் சமமென்
றோதும் பொருண்மையுங்
குணத்திற் பற்றிப்
பரவும்ஐ வகையில் ஈரைம்
பகுதியாற் பிறவாற்
சேர்தல்
உரைதரு புணர்ச்சி யாகும்

உபரியும் அனைய
தொன்றே. 39

395 உறுத்தலே நெருக்கல்
மெல்ல உரோசுதல் உறுதல்
முன்னா
மறுத்தவிர் தருவு சூழ்ந்த
வல்லியே மரமேற்
கோடல்
செறித்தவெள¢ ளரிசி
பாலார் தீம்புனல் செயிர்தீர்
காட்சிப்
புறத்தி லோர்உறுப்
புறுத்தல் புணர்ச்சியிற்
புல்லற் பால. 40

396 வைத்தலே துடித்தல் ஒற்று
மரபொப்பு விலங்கு சுற்றே

உத்தர மதுக்கல் உள்ளீ
டோங்குசம் புடாதி
தன்னால்
பத்துடன் ஒன்றும் ஏனைய
பல்வகை உறுப்பு நாடி
முத்திறத் தமிர்தம்
உண்டல் முன்மொழி
சுவைத்த லாமே. 41

397 சுரிதகம் எண்ணாட் டிங்கள்
தூயமண் டலமே மஞ்ஞை
நிரலடி முயலின் புன்கால்
நெய்தலின் இதழே
வேங்கை
உருகெழு நகவி ரேகை
உருவில்ஏழ் உறுப்பி
லெங்கும்
வரன்முறை நகத்தால்

தீட்டல் வள்ளுகிர்க் குறிய
தன்றே. 42

398 துவர்படு பவள மாலை
சுனகமூ டிகமே ஏனக்
கவரடி மணிபோழ் வட்டக்
கடிகண்டப் பிரத முற்றும்
இவைஅல பிறவும் போல
இன்னமு துண்ட தானம்
அவைதமில் நெறியால்
தந்தம் அழுத்தல் பற்குறிய
தம்மா. > 43

399 உரமுதல் ஐந்தில் ஐம்பால்
உணர்தொழில் முறையால்
ஏற்பப்
பொருவரு புணர்ச்சி
வேலை புடைத்திடல்
புடைப்ப தாகும்

கரிகர மாதி யாய
கனங்குழை மகளிர் வெ·க
மருவிய வழிபா டன்றே
மத்தனம் என்ப வல்லோர். 44

400 மயில்புற வன்னங் காடை
வண்டு வாரணஞ்
செம்போத்துக்
குயிலென இசைக்கும்
எட்டின் குரலினைப்
பயின்று காமர்
இயலுறு மகளிர் பாங்கர்
எய்துழ இவையில்
வேண்டுஞ்
செயல்வகை புரியு மாறு
சிறந்தசீற் கார மாமே. 45

401 பாரியல் கிராமி யஞ்சீர்ப்

பவுத்திக நாக பாசம்
ஏரியல் நாக ரீகம் இந்திரா
ணிகமே கூர்மஞ்
சாரிதம் ஆய்தம் மூர்த்தஞ்
சங்கிரா ணிகமண் டூகம்
பாரிசம் பிடிதஞ் சூலஞ்
சுரும்பிதம் பதும பீடம். 46

402 எண்டகுஞ் சம்பு டம்வேட்
டிதம்விசும் பிதமுற்
புல்லம்
பிண்டிதம் பீடி தம்மே
பிரேதுகை அநுபா தந்தான்
பண்டதங் கடக மத்த
பத்மவா சனஞ்ச மூர்த்தம்
தண்டகம் லளிதம் வேணுச்
சாரிதஞ் சமவே சன்னம். 47

403 ஆடவஞ் சமபு டத்தோ

டமர்பரி வத்த கஞ்சங்
காடகந் தேனு கம்மற்
கடகம்ஜம் பதமே சானு
மாடமர் துகிலம் பீனம்
ஆத்திக மேகூர்ப் பன்னம்
பீடிதோ ருகமம் பீதம்
பீடிகை யோடு பின்னும். 48
404 ஒட்டுவிக் கிரம மேகோ
யூதகம் என்னும் நாற்பான்
எட்டுள திறத்தி னானும்
இவையல பிறவாற்
றானும்
மட்டமர் குழலி னா£கள்
மகிழ்தர மதனூல் தேறுஞ்
சிட்டா¢கள் புணரும்
பான்மை சித்திரக் கரண
மாமே.

405 திணைநிலை மகளிர்
தத்தந் திறங்களுஞ் சேர்தல்
மாண்பும்
உணர்குவ ரெனினும் மற்ற
ஒண்குழு வதனுள் நின்ற
கணிகையிற் பரத்தை
காமக் கன்னியர்
ஒழிந்தோர் தம்மைப்
புணர்கையும் பிறவுந்
தேர்¢தல் புலமையோர்
கடனாம் அன்றே. 50

406 முன்னுற மதன நூலின்
முறையெலாந் தொகையிற்
கூறி
அன்னதன் வகையுங் கூறி

அகலமும் எடுத்துக் கூறிப்
பொன்னவன் இருத்த
லோடும் புரந்தரன்
அவற்றை ஓர்ந்து
கன்னியைப் புணருங்
காமக் கவலைமேற் 51
கருத்தை வைத்தான்.
407 கொற்றவெங் குலிச
வள்ளல் குரவனை
இறைஞ்சி எந்தை
சொற்றிடு பான்மை
யெல்லாந் துணிவது
வாகக் கொண்டே
மறறொரு பொருளும்
வெ·கேன் வரம்பிலா
இன்பந் தன்னைப்
பெற்றனன் போலும்

என்னப் பெருமகிழ்
வெய்திப் போனான். 52

408 வேறு
திரைசெறி கடலெனத்
திளைக்கும் இன்பநூல்
உரைசெய்து பொன்னவன்
உவப்பிற் போந்திட
விரைசெறி தொங்கலான்
மேலைப் பொன்னகர்
அரசினை மதலைபால்
ஆக்கி னானரோ.
53

409 விண்ணுல காளுறும்
வேந்தி யற்கையை
அண்ணலஞ் சயந்தனுக்
கருளி இந்திரன்
தண்ணுறு சசிமுகச்

சசியைக் கூடியே
எண்ணரும் போகமுற்
றினிது வைகினான். 54
410 அலைகடல் அமிர்தினை
வெறுக்கும் ஆயிழை
இலவிதழ் அமுதமே
இனிதென் றுண்டிடுங்
கொலையயி ராவதந்
துறக்குங் கோல்வளை
முலையயி ராவத முயங்கி
மேவுமே. 55
411 வெல்குறும் வலியுடை
விருத்தி ரன்மிசைச்
செல்குறுந் தெய்வதத்
தேரைச் சீறிடும்
ஒல்குறு நுசுப்பினை
உடைய மங்கைதன்

அல்குலந் தேர்மிசை 56
அசைந்து வைகுமே.
412 கருங்கடல் சூழ்புவி
கவிழ்ந்து துன்புற
இரங்கிய இடிக்கொடி
இகழ்ந்து காய்ந்திடும்
பொருங்கணை
விழியுடைப் புலோம
சைத்திரு
மருங்குல்மின்
கொடியின்மேல் மகிழ்ச்சி
கொள்ளுமே. 57
413 இயற்படு தவமுனி
யாக்கை என்பினாற்
செயற்படு வச்சிரஞ்
செங்கை நீத்திடு
மயிற்பெடை யன்னதோர்

மடந்தை கண்ணெனும்
அயிற்படை சேர்ந்திட
அதனைத் தாங்குமே. 58

414 இருள்நிற விசும்பினில்
இடைய றாமலே
வருசிலை இரண்டையும்
மறக்கு மாமலர்த்
திருநிகர் வனப்புடைத்
தெய்வ மங்கைதன்
புருவவெஞ் சிலைகளே
பொருளென் றுன்னுமால். 59

415 ஏந்தலம் புயலினை
இகழும் ஏந்திழை
கூந்தலம் புயல்மிசை
உவகை கூ£¢ந்திடும்
பூந்தரு வல்லியை

முனியும் பூண்முலை
வாய்ந்திடும் உரோமமாம் 60
வல்லி புல்லுமே.

416 இத்திறம் இந்திரன் இந்தி
ராணிபால்
வைத்திடும் உளத்தினன்
மறுமை எய்தினுங்
கைத்திடு கருத்தினன்
காமத் தின்பமே
துய்த்தனன் மதனநூல்
துணிபு நாடியே. 61

417 வேறு
அன்னதோர் நாளில்
ஓர்நாள் அமரர்கோன்
ஆணை போற்றிப்
பொன்னகர் செங்கோல்
ஓச்சிப் புரந்திடு சயந்தன்

என்போன்
தன்னயல் வந்து வைகுந்
தாபதர் அமரர் தம்முள்
முன்னுற கின்ற ஆசான்
முகனெதிர் நோக்கிச்
சொல்வான். 62

418 எந்தைகேள் மலரோன்
ஆதி இயம்பிய அமரர்
யாரும்
அந்தமில் முனிவர் யாரும்
ஆற்றல்வெஞ் சூரன்
தன்னால்
வெந்துயர் உழந்து
தொல்லை மேன்மையும்
இழந்து தாழ
வந்தகா ரணமத தென்கொல்
என்றலும் மறையோன்

சொல்வான். 63

419 விண்ணவ ராயி
னோர்க்கும் மேதகு
முனிவர் யார்க்கும்
எண்ணமில் சூரன்
தன்னால் எய்திய தீமை
யெல்லாம்
நண்ணலர் புரமூன் றட்ட
நாதனை அன்றித் தக்கன்
பண்ணிய மகத்திற் புக்க
பாவத்தால் விளைந்த
தென்றான். 64

420 என்றலுஞ் சயந்தன் கேளா
ஈதுகா ரணமேல் அந்தப்
புன்றொழில் தக்கன்
வாழ்க்கை புரமெரி படுத்த

தேவை
அன்றியே செய்த வேள்வி
ஆயிடை நிகழ்ச்சி யாவும்
ஒன்றற உரைத்தல்
வேண்டும் சிறியனேன் 65
உணர்தற் கொன்றான்.
421 சயந்தனென் றுரைக்கும்
வள்ளல் சாற்றிய துணரா
ஆற்ற
வயந்தனை எய்தி வாழி
மதலைகேள் இதனை
என்னா
வியந்திடும் அகந்தை
தன்னால் மிக்குறு தக்கன்
காதை
நயந்தரு மொழியால்
ஆசான் இத்திறம் நவிலல்

உற்றான்.



ஆகத் திருவிருத்தம் - 421

----------

தேவகாண்டம் முற்றுப்பெற்றது
ஆகக் காண்டம் ஐந்துக்குத்
திருவிருத்தம் - **8278**

------

---

This file was last revised on 5 June 2008
Feel free to send the corrections to the webmaster.